உ
ஓம்

# பக்திப் பாமாலை







கலாபூஷணம், பண்டிதை
திருமதி.வை.கணேசபிள்ளை

2020

உ

சிவமயம்



# பக்திப் பாமாலை

பண்டிதை, கலாபூஷணம்

## திருமதி.வை.கணேசபிள்ளை

வெளியீடு :

ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார்

அறநெறிப்பாடசாலை


திருநெறிய தமிழ் மறைக்கழகம்,

இணுவில்.

21-02-2020

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | **பக்திப் பாமாலை (தொகுப்பு)** |
| நூலாசிரியர் | : | திருமதி.வைகுந்தம் கணேசபிள்ளை |
| மொழி | : | தமிழ் |
| வெளியீடு | : | ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் அறநெறிப்பாடசாலை, திருநெறிய தமிழ்மறைக் கழகம் - இணுவில். |
| முதற்பதிப்பு | : | மாசி, 2020 |
| பதிப்புரிமை | : | திருநெறிய தமிழ்மறைக்கழகம் |
| நூல் வடிவமைப்பு | : | சுடர்நிலவு கிரபிக்ஸ், இணுவில். |
| பக்க அளவு | : | A5 |
| பக்கங்கள் | : | viii + 58 |
| விலை | : | 200/= |

# அம்பலம் கந்தையா
## (இணுவில் தெற்கு)



1955ஆம் ஆண்டு இறையடி சேர்ந்த
எனது தாய்வழிப் பாட்டனார்
அம்பலம் கந்தையா
அவர்களின் பாதங்களுக்கு இந்நூலைச் சமர்ப்பித்துக்
காணிக்கையாக்குகிறேன்.

உ

திருவருள்மிகு

**இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் திருக்கோயில்**

THIRUVARUL MIKU

INUVIL SRI PARARAJASEGARAP PILLAIYAR THIRUKKOVIL

| | | |
|---|---|---|
| Inuvil South,<br>Inuvil. | சிவஸ்ரீ வை.சோமாஸ்கந்தக்குருக்கள்<br>சிவஸ்ரீ சோ. அரவிந்தக்குருக்கள் | இணுவில் தெற்கு.<br>இணுவில். |



# ஆசியுரை

திருமதி.வைகுந்தம் கணேசபிள்ளை அவர்கள் ஒரு சிறந்த கவிஞர் ஆவார். சிறந்த இறைபக்தியாளராகவும் விளங்குகின்றார்.

எங்களூர்க் கோயில்களில் வீற்றிருக்கும் தெய்வங்கள் மீது பக்திப் பாடல்களையும், திருவூஞ்சல்களையும் இயற்றியுள்ளார். வெறுமனே பாடல்களை இயற்றியிருந்தால் அதில் உயிரோட்டம் இருக்காது. பக்தி என்னும் சுவை அதோடு கலந்திருந்தால்தான் அப்பாடல்கள் உயிர் பெறும்.

அந்த வகையில் ஆசிரியரின் பாடல்கள் உயிரோட்டம் மிக்க தாக உள்ளன. அன்னாரின் பக்திப் பாடல்கள் நூல் வடிவம் பெற்று வெளிவருகின்றது. எல்லோரும் இந்நூலை வாங்கிப் படித்து இறை பக்தியுள்ளவர்களாக வாழ எல்லாம் வல்ல ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் திருவருள் வேண்டி வணங்கி வாழ்த்துகிறேன்.

நன்றி

**சிவஸ்ரீ வை.சோமாஸ்கந்தக் குருக்கள்**

# ஆசியுரை



இணுவையம்பதியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி. வைகுந்தம் கணேசபிள்ளை அவர்கள் தமிழ்ப் பண்டிதராக இருந்து தமிழையும் சமயத்தையும் வளர்ப்பது மட்டுமன்றி வில்லுப் பாட்டு, நாட்டிய நாடகம், பாமாலை, பிள்ளைத்தமிழ் போன்ற நூல்களை எழுதி மக்களின் மனதில் இடம்பிடித்த ஒருவ ராவார்.

இவர் தாய்வழிப் பாட்டனான அம்பலம் கந்தையாவின் நினை வாக பக்திப் பாமாலை எழுதி வெளியிடுவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். தனது குல தெய்வங்களாக விளங்கும் இணுவையம்பதி விநாயகர், முருகன் முதலிய தெய்வங்களுக்கும் அயலூரிலுள்ள தெய்வங்களுக்கும் பக்திப் பாடல் பாடி வெளியிடுவது மிகவும் சிறப்பான தாகும். அவரின் பணி தொடர எல்லாம் வல்ல இணுவையம்பதி நொச்சி யொல்லை முருகன் அருள் புரிவாராக.

நன்றி

**சித்தாந்த ரத்தினம், சைவாகம பூஷணம்**
**சிவசாமி ஐயர் குமாரராஜக் குருக்கள்**
**கந்தசுவாமி கோயிலடி,**

# வாழ்த்துரை



அனைத்து இந்து மதத்தினராலும் அனுட்டிக்கப் படும் மகாசிவராத்திரி தினமாகிய இன்றைய நன்நாளில் இராமநாதன் கல்லூரியில் நீண்டகாலமாக ஆசிரியராக இருந்து ஓய்வு பெற்ற பண்டிதை திருமதி.வைகுந்தம் கணேசபிள்ளை அவர்களால் இயற்றப்பட்ட பக்திப் பாடல்கள் நூல் தொகுப்பு வெளியீடு செய்யப்படுவது மிகவும் பாராட்டத் தக்கது.

யாழ் பிரதேசத்தில் இந்நூல் தொகுப்பு, சைவ பாரம்பரியத்தில் வாழும் இணுவையம்பதியில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற பரராஜசேகரப் பிள்ளையார் கோவில் மண்டபத்தில் நிகழ்வது இணுவில் வாழ் மக்களுக்கும் நூலாசிரியருக்கும் மேலும் பெருமையுடையதாகிறது.

நூலாசிரியர் பரராஜசேகரப் பிள்ளையார் கோவில் மீது மட்டுமன்றி மருதடி விநாயகர், சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் போன்ற பல்வேறு ஆலயங்கள் மீதும் பாடல்கள் பாடியுள்ளமை அவரது இறை பக்தியையும் அளவற்ற தமிழ்ப்புலமையையும் பறைசாற்றும் முயற்சியாகின்றது.

இது எல்லோரையும் மகிழ வைப்பதுடன் ஏனைய கவிஞர்களையும் ஊக்குவிக்கும் ஒன்றாக அமையும் என்பதில் ஐயம் ஏதுமில்லை. இவரது கடந்த கால ஆக்கங்கள் பல நாட்டிய நாடகப் பாடல்கள், ஊஞ்சல் பாடல்கள், வேலணை முடிப்பிள்ளையார் பிள்ளைத்தமிழ் போன்றன. இதன் காரணமாக 2011ஆம் ஆண்டில் ஜனாதிபதியினால் கலாபூஷண விருது பெற்ற பெருமை யுடையவர். இவரின் நீண்ட நாள் முயற்சியும் விருப்பும் இன்று நனவாவதற்கு அருள் பாலித்த பரராஜசேகரர் பாதம் பணிந்து வேண்டுகிறேன். மேலும் இன்றைய பக்திப்பாமாலை மலர் வெளியீடு சிறப்புற நடைபெற எனது மனம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன். நூலாசிரியரின் பல்வேறு ஆக்கங்கள் கையெழுத்துப் பிரதிகளாக உள்ளன. இவை யாவும் அச்சிடப்பட்டு நூலுருவாக்கம் பெற பரராஜசேகரப்பிள்ளையார் அருள்பாலிக்க வேண்டி மீண்டும் வாழ்த்துகிறேன்.

நன்றி

**திருமதி.வேணுகா சண்முகரத்தினம்**
**ஓய்வுபெற்ற அதிபர்,**
**யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.**

# வெளியீட்டுரை

எமது கழகமானது ஆண்டுதோறும் பல நூல்களை வெளியிட்டு வருகிறது. சென்ற வருடம் சிவராத்திரி தினத்தில் எமது கழக அமைப்பாளர் திருமதி.வை.கணேசபிள்ளை அவர்களால் எழுதப்பட்ட கீர்த்தனைகளும் பதமும் என்ற நூலைக் கழகம் வெளியிட்டது.

இந்த வருடமும் சிவராத்திரி தினமான 21.02.2020இல் அவரால் எழுதப்பட்ட பக்திப் பாமாலைத் தொகுப்பினை திருநெறிய தமிழ்மறைக் கழகத்தினராகிய நாம் வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகின்றோம். மேலும் ஆசிரியரின் பணி தொடர வாழ்த்துகின்றோம்.

நன்றி.

**திருநெறிய தமிழ்மறைக்கழகம்**
**இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோவில்.**

# எனதுரை



எமது ஊரில் பழம்பெருந் தொன்மை வாய்ந்ததும் சரித்திரப் பிரசித்தி பெற்றதுமான ஆலயங்கள் அமைந்துள்ளன. அவற்றைப் பற்றிய பக்திப் பாடல்கள் பல இவ்வூரிலுள்ள மூதறிஞர்கள் பாடித் தந்துள்ளனர். மேலும் பாடல் பெறாத தெய்வங்களுக்கு அடியவர்கள் கேட்டபொழுது பாடல்கள் பாடியுள்ளேன். அயலூரிலுள்ள தெய்வங்களுக்கும் பாடவேண்டிய தேவை ஏற்பட்ட பொழுது பாடினேன். இந்த வகையில் பாடப்பட்டு நூலாக்கம் பெறாத பாடல்களும் புதிய பக்திப் பாடல்களும் இந்நூலில் இடம்பெறுகின்றன. கையெழுத்துப் பிரதிகள் நூலுருப் பெற வேண்டிய தேவையும் ஏற்பட்டது.

இங்கே மருதடி விநாயகர் பாமாலை, சுதுமலை அம்மன் பாமாலை அவ்வூர்த்தொண்டர்கள் கேட்டதற்கிணங்க 2017இல் எழுதப்பட்டவை. சில பாடல்கள் இறுவட்டில் வெளிவந்தன. எனது கணவரின் சொந்த ஊரான தையிட்டி அரசடி விநாயகர் ஆலயக் கும்பாபிடேகத்தின்போதும் குடமுழுக்குப் பாமாலை இறுவட்டில் வெளி வந்தது. ஏனைய பாடல்கள் எமது ஊர்த்தெய்வங்களான பரராசசேகர விநாயகர், முத்துக்குமாரசுவாமி, இணுவை முருகன், சாந்தியடியான், வெங்கடேஸ்வரர் மீதும் பாடப்பட்டவை. கோண்டாவில் மகா கணபதி பிள்ளையார் கோபுர கும்பாபிடேகத்தின்போது பாடி இறுவட்டாக வெளி வந்த குடமுழுக்குப் பாமாலையும் நூலாக்கம் பெறுகிறது.

எனது ஆக்கங்களைப் பார்த்தவர்கள் உங்களுக்கோர் பாரம் பரிய பின்னணி உண்டு என்பர். எனது பெற்றோர் கல்விமான்கள் அல்லர். ஆனால் கடவுள் பக்தியுடையவர்கள். எனது தாய்வழிப் பாட்டன்மார் அதீத பக்தியுடன் சிவதொண்டும் செய்து வாழ்ந்தவர்கள். அவர்களது பாரம்பரியப் பின்னணியே என்னை இதில் ஈடுபட வைத்தது என நம்புகிறேன்.

தாயாரின் பேரனான அம்பலம் சிறந்த சிவபக்தர். சிதம்பர நடராஜரைத் தொழுதபடியே சிவபதம் அடைந்த வரலாறு உண்டு. தாயாரின் தந்தையார் அம்பலம் கந்தையா இணுவில் கந்தசுவாமியார் கோவில் பூந்தோட்டம் அமைத்துத் தூப தீபமேற்றல் முதலிய பல தொண்டுகளை நீண்டகாலமாகச் செய்து வந்தவர். இருண்ட காலமாக ஆலயம் சில வருடங்கள் பராமரிப்புக் குன்றியதாகக் காணப்பட்ட நேரத்தில் கந்தையாவின் பணி பெரிதாக இருந்தது என்று நம்பு கிறேன். இவர் 1955இல் காலமானார். அதுவரை அவரது பணி சிறந்தது. இவர் சம்பந்தமான கட்டுரை ஒன்று சந்நிதியான் இதழில் 2012 மாசி மாதம் வெளிவந்தது. அது பின்னிணைக்கப்பட்டுள்ளது.

இந்நூலில் இடம்பெற்றுள்ள பாடல்களைப் பாடுவதற்கு சக்தியைப் பெற்றுத்தந்த எமது குலதெய்வங்களான விநாயகப் பெருமானையும் முருகனையும் எனது பெற்றோர் ஆசிரியப் பெரு மக்களையும் வணங்கி, எனது மூதாதையரும் பாரம்பரியப் பின்னணி பக்தர்களுமான அம்பலம், கந்தையா பாட்டன்மாரின் நினைவாக அவர்களின் பாதங்களில் இந்நூலைச் சமர்ப்பிக்கின்றேன்.

இதனை வெளியிட மனமுவந்து செயற்படும் எமது திருநெறிய தமிழ்மறைக் கழகத்தினருக்கும், ஆசியுரைகள் தந்த அந்தணப் பெரியார்களுக்கும், வாழ்த்துரை வழங்கிய யா/வேம்படி மகளிர் கல்லூரி ஓய்வுநிலை அதிபர் திருமதி.வேணுகா சண்முகரட்ணம் அவர்களுக்கும் இந்நூலை உருவாக்கம் செய்து தந்துதவிய சுடர்நிலவு பதிப்பகத்தினருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

வணக்கம்

**பண்டிதை கலாபூஷணம்**
**திருமதி.வை.கணேசபிள்ளை**

உ
சிவமயம்

# இணுவில் ஸ்ரீ பரராசசேகரனைக் கரங்கூப்பி ஏத்துவோம்



## கணபதி காப்பு

கருவுற்ற நாள் முதலாய் கைதொழுவார்க் கருளும்
திருவுற்ற இணுவிலுறை கற்பகமே - பளுவுற்று
நின்னருள் பெற்றுக் கவிபாட என்றும்
என்னுள்ளத் துறைவாய் இனிது

01. சுந்தரப் பசும்பொன்மாமலையே இணுவிலுறை
ஸ்ரீ பரராச சேகரனே போதக்களிறே
அந்தரத்துத் தேவர்களும் முனிவர்களும் வந்துவந்து
வணங்கும் வாரணமே வானோங்கு
மந்தர மலை போலெழுந்து நிற்கும் கோபுரங்கள்
நாலுங் கொண்டமா தங்கனே பாலச்
சந்திரனே வக்கிர துண்டனே பெருச்சாளி
வாகனனே ஏரம்பா நின்பாதம் ஏத்துவமே

02. ஆதியில் சிங்கைப் பரராச சேகரன் மன்னன் கைகூப்பி
வழிபட்ட பெருமையினாய் பெருமானே
கோயிலும் குளமும் கோபுரமும் திருமஞ்சனமும் அமைத்து
யானை மேல் பாற்குடப் பவனிவந்து
வாயிலில் ஆராத்தி வழிபாடு செய்து பாலாபிடேகம்
செய்து குடமுழுக்கு மாட்ட மகிழ்ந்தவரே
வயல்புலம் செழிக்க இணுவைப்பதி துலக்கவைத்த
பரராச சேகரனைக் கரங்கூப்பி ஏத்துவமே.

03. திருவாத்தியொடு பொற்கொன்றை பொன்னொச்சி
பூத்துக் குலுங்கும் சூழலிலே நிறைவாக
திருவீதிகள் தோறும் பக்தர்களும் சித்தர்களும் பூமாலைத்
தொண்டர்களும் போற்றிசைக்கும் கலைஞர்களிருக்க
அருகருகே வேதவொலி மந்திரங்கள் ஓதும் வேதியர்
இருக்கையொடு தேவாரப் பண்ணிசைப் போருஞ்சூழ
பெருநிதிதரவரும் ஆனந்த மலையாய் கோயில்
கொண்டிருப்பவரைப் பரராசசேகரனைத் தொழுவோம்.

04. அந்நியர் வருகையால் அசையாது அழியாது அருட்திறத்தால்
மடத்துவாசலான் என்று பெயர் பெற்றவனே
செந்நியிலும் அருள்செறி நெஞ்சத்திலும் உமைச் சுமந்த
பக்தர்கட்கு அருள்மழை பொழிபவரே
பன்னிருகை வேலவன் அருகிருக்கும் பேறு பெற்றவனே
பக்தர்கட்கு அளொடு பொருளும் தருபவனே
கன்னலே தேனே கணபதியே காலத்தால் அழியாத
கலைக்கோயில் கொண்டவரே நின்தாள்போற்றி.

05. பள்ளித் தலமனைத்தும் கோயில் செய்குவோம்
என்ற பாரதி பாடல் தாரகமாககச் செயல்பட
பள்ளித் தலமொன்று உன்னருகில் உருவாக்கி
கல்வித் தானமும் மக்களுக்கு அள்ளிக் கொடுத்தாய்
வள்ளல்களோடு பெருங்கல்விமான்களும்
பெருகிவர அருள்பாலித்த கருணாகரனே
தெள்ளத் தெளிந்த அறிஞர்கள் உன்புகழ்பாடவும்
பணி செயவும் தொண்டர்கள் பலரை உருவாக்கினாய்

06. காலத்தின் கோலத்தால் அழிபாடுகள் நேர்ந்தபோதும்
கருணை மழைபொழிந்து காப்பாற்றினாய்
சீலத்தவர் பக்தர்கள் பலர்கூடித் திருப்பணி
மேற்கொள்ள மகத்தான ஞானமளித்தாய்
உவந்து பிடியரிசியுடன் தொடர்ந்த திருப்பணி
பக்தருள்ளம் போல் உயர்ந்த கோபுரமாயது கொடையால்
கவிந்த கைகளின் உதவியால் மேலுந்திருப்பணி உயர்ந்தது
தொண்டர்கள் பலரை உருவாக்கிய புண்ணியனே.

07. ஆவணிச் சதுர்த்தியுடன் அவதார நாளென்று சஷ்டி
விரதம் இருப்பவர் வேண்டுபவை அளிப்பவரே
ஆகமக் கிரியைகள் யாகங்கள் ஏற்று உவப்பவரே நாளும்
புனிதர் கைப்பட்ட பூமாலை அணிபவரே
புராணப்படிப்பும் திருமுறை ஓதுவார் இசையும் கேட்டுக்
கேட்டு மகிழும் வாரணமே கணபதியே
ஏரம்பனே இணுவிலுறை மாதங்கனே பரராச சேகரனே
காலம் கடத்தாது நாடுநலம்பெற அருள்புரிவாய்

08. சிற்பங்கள் சிலைகள் வரலாற்று ஆவணமாய் நிலைத்து
செழுங்கலை நியமமாய் மிளிருங் கோயில்
கற்பனைக்கும் எட்டாத கலைவடிவே காண்பவர்
கேட்பவர் இன்புறுவார் நின்பெருமைதனை எண்ணி
உற்றோம் உமக்காட்பட்டோம் ஐங்கரனே எம் அற்பத்
தனங்கள் அழித்து அருள் புரிந்து உன் அரிய
பொற்பதம் தந்தருள்வாய் மூவாமுதலே முக்கண்ணா பலமுறை
வலம்வந்து வரம்பல வேண்டுகின்றோம் ஐயனே.

09. மங்காத திருவருளைப் பொழிந்து மடமையகற்றி
மாசறு கல்வியும் ஞானமும் வழங்க அறநெறி தழுவி
இங்கே நற்கல்விக் கூடமும் சிறுவர் சிறுமியர்க்கு ஒரு
முன்பள்ளியும் பொதுநூலகமும் அமைத்து
சங்கையாகக் கன்னிகா தானத்திற்கோர் கலியாண
மண்டபத்துடன் அன்னதானத்திற்கும் மண்டபங்கட்டி
இங்கிதமாக மக்கள் மனங்குளிரவைத்து அடியவரை
ஆட்கொள்ளும் பேரருளே உன்னை ஏத்திப் பணிகின்றோம்.

10. பவனிவரத் தேருண்டு மஞ்சமுண்டு பெருச்சாளி
வாகனமும் உண்டு இளைஞர் தோள்களுண்டு
அவனி உய்ய நீயுண்டு உனதருளுண்டு காவிரி
பாய்ந்தோட அகத்தியர் கமண்டலம் கவிழ்த்த கணபதியே
புவன முய்ய மாமேருவில் மா பாரதம் எழுதி வைத்தாய்
கணபதியே மூவர் தேவார ஏடுகள் எடுத்துத் தந்த ஏரம்பனே
தவநிதியம் தந்தருள்வாய் தந்திமுகனே இணுவில்
உறை பஞ்சமுகனே பரராசசேகரனே.

# மருதடியான் புகழ் பாடுவோம்



## காப்பு

பார்புகழும் மருதடியான் விநாயகரின்
புகழ் பாடத் தென்னிணுவைச்
சீர்புகழும் பரராசசேகரனின் பாத
பங்கயங்களே காப்பு.

1. காட்சி ஒன்று கண்டநாள் முதலாய் கனவுதானே
என்று கபடமறியாது உவந்திருந்தேன்
சாட்சி ஒன்று வந்தது மருதடியான் புகழ்பாடு என்று
கேட்டது மெய்சிலிர்த்தேன் கண்டேன் உண்மை இதுவென
மீட்சி கண்டேன் ஐயன் மருதடியான் மாமலை போல்
நின்று அருள்மழை பொழிந்தது உணர்ந்தேன்
ஆட்சி அவனே என்று உள்ளம் உணர உவகை
கொள்ளப் பாடிப் பணிகின்றேன்.

2. ஓங்கார நாதம் ஒலி எழுப்பும் கண்டா மணிஓசை
கேட்டு வேத பாராயண ஒலியுடன்
ஆங்காரமடங்கிய அன்பர் அடியவர் பாடுந்தெய்வத்
தமிழ் இன்னிசையும் வானில் கலந்து பரவும்
பூங்காவனம் எனக்கோயில் அலங்காரங்களோடு
விளங்கும் அருள் பரந்து விரியும்
நீங்காதே பக்தர் கூட்டம் நெருங்கியே வந்து
வந்து கூடும் ஆனந்தபரவச மாகும்.

3. ஐந்தொழில் தத்துவங் காட்டும் அற்புதக் கணபதியே
அளவிலா ஆற்றலுடையோனே ஐங்கரனே
தந்திமுகனே கஜமுகனைச் சங்கரித்தாய் பெருச்சாளி
வாகனப் பேறுங் கொடுத்தாய் கஜமுகனே
தொந்திக் கணபதியே உன்புகழ் உலகமெலாம்
பேசிப் பேசி மகிழுதையா குணநிதியே
சிந்தை குளிர்ந்து கந்தனுக்கு வள்ளியை மணம்
முடித்து வைத்து மகிழ்ந்தவனே சரணமையா!

4. நயந்தே சிவனார் களிறாகி உமைபிடிவடிவமாகி
நின்றவேளை ஆனைமுகத்துடன் அவதரித்தாய்
வியந்தே உலகம் விக்கினங்கள் தீர்ப்பான் இவன் என
விநாயகன் ஆகினையே உவந்தே விரும்பி
உயர்ந்த எலிவாகனத்தை ஏற்றனையே அன்று சிவன்
தேர் அறுத்து உன்பெருமை நிலைநாட்டினாய்
அயர்ந்தோம் பெருமை கேட்டு அடிபணிந்தோம்
நீதியும் நியாயமும் நிலைக்கச் செய்வாய்.

5. அறநெறி பிழைத்த அந்தகரை அழிக்க வென்று
அங்குச பாசம் ஏந்தினையோ ஐங்கரனே
மறநெறி நீக்கி மாசுகள் அகற்றி மக்களுக்கு அருள
வந்து மருதடியில் வீற்றிருந்தாயோ இனிது
முறக்காதும் வேழமுகமும் ஒற்றைக்கொம்பும்
சப்பைக் காலுங்கொண்டு ஆட்கொள வந்தாயோ
கறங்குபோலச் சுழலும் இவ்வுலக வாழ்வில் விரைந்து
தீமைகள் அழித்து நலம்பல அருள்வாய்

6. அட்டகாசம் செய்த அனலாசுரனின் ஆணவம்
கண்டு இழுத்து உன்வயிற்றுள் அடக்கினாய்
திட்டம் போட்டுத் திருடும் கூட்டத்தை திருத்தி
ஆட்கொள்வாய் தீயன களைவாய் நாளும்
வட்டம் போட்டு வலம்வந்து வழிபடும் அடியவரை
அவர் வேதனை கேட்டுத் துடைத்து அருள்வாய்
குட்டிக் கும்பிட்டோர் குறை தீருமையா கணபதியே
கரிமுகனே மருதடிக் குஞ்சரமே.

7. மருதடி விநாயகனை இருகரங்கள் கூப்பி
வழிபடுவோம் சிரசில் குட்டி வழிபடுவோம்
மருத மரத்தடியில் வீற்றிருப்பான் அவன் அழகாக
மானிப்பாய் நகரை ஆட்சி செய்வான்
விரும்பும் வரங்களைத் தந்திடுவான் வேண்டுவார்க்கு
வேண்டிய செல்வங்களை அள்ளித் தருவான்
சுரும்பூதா மலர்பறித்து பாதங்களில் வைத்திடுவோம்
பக்தியுடன் நாம் வழிபடுவோம் பண்ணிசைப்போம்

8. கரும்பும் இளநீரும் கதலியும் செந்நெல்லும்
விளைந்திடும் வயல் புலமும் நாற்புறமும்
சுரும்பாரும் மலர்ப்பொழிலும் கோவிலும் குளமுமாய்
நற்செழுமையுடன் வீற்றிருந்த கணபதியே
மருதமர நிழலில் வீற்றிருந்தபடி அருள்வழங்கும்
சித்தி விநாயகரே முத்தி தருபவரே
குருவாகி வந்தெம் மனமாசு போக்கி அருள்வாய்
உருவாகி உள்ளமர்ந்து ஞானமது தருவாய்

9. காலால் நடந்து உன் பக்தர்கள் காணிக்கை
பல பக்தியுடன் கொண்டு வருவார்
நாலா திசையிருந்தும் காவடிகள் பல ஆடி
வருவார் கற்பூரச்சட்டி எடுத்து மகிழ்வார்
பாலபிஷேகம் கண்குளிரக் கண்டு மகிழ்வார்
பன்னீர் அபிடேகம் செய்து மகிழ்வார்
வேலாயுதன் அண்ணனிவன் வேழமுகத்தவன்
மருதடியான் என்று மகிழ்வார்

10. நாற்றிசையும் கோபுரங்கள் நல்ல திருப்பணிகள்
கண்டு வானவரும் வந்து வணங்குகின்றார்
ஏற்றியே வழிபடுவார்க்கு ஏற்றங்கள் பல கொடுத்து
வாழ வைத்த கணபதியே ஏரம்பனே
போற்றியே துதித்துப் பேசும் உன்புகழ் அருட்பெருமை
எல்லாம் வானிலே சென்று நாலாதிசையும்
காற்றிலே பரவி பூதலத்தைக் காக்குதையா கணநாதனே
கருணாநிதியே மருதடி விநாயகனே.

11. ஐந்து கரத்தோனே ஆனைமுகக் கடவுளே
பானை வயிற் றோனே பரமசிவன டித்திரனே
கந்தனுக்கு மூத்தோனே கருணைக் கடலே குணபதியே
ஔவைக்கு அருள்சுரந்தவனே திருநாரையூர்
நம்பிக்கும் அருள்சுரந்தாய் தெய்வத் திருமுறைகள்
சிதம்பரத்தில் காட்டி வைத்தாய் கணபதியே
நம்பியே கைதொழும் அடியவர்க்கு காட்சி தந்தாய்
தும்பிக்கை காட்டித் துணையிருந்தாய்.

12. மருப்பொன்றொடித்து மாமேருமலையில் பாரதக்
கதை முழுதும் எழுதிவைத்த கணபதியே
மருத மரநிழலில் மானிப்பாய் நகரில் வந்து இனிதே
குடிகொண்ட மகா கணபதியே கற்பகமே
வருத்தம் துடைத்து வருமடியவர் இடர்தீர்த்து
வாழ வைக்கும் வேழமுகனே விநாயக
நிருத்தனே நிர்மலா மருதடியானே நன்மைபெருக
நின்பாதங்கள் சரண் அடைந்தோம் ஐயனே

13. ஆவணிச் சதுர்த்தியில் அவதரித்தாய் ஆதிக்கடவுளே
திருமாலுக்கு சாபவிமோசனம் அளித்தாய்
பாவவினைகளை பறந்தோடச் செய்பவனே விநாயகா
சந்திரனுக்குச் சாபங் கொடுத்தாய்
காவிரி பாய்ந்தோட அகத்தியர் கமண்டலங் கவிழ்த்தாய்
இந்திரனை மகிழ்வித்தாய் இமையவரைக் காத்தாய்
பூவிரி தண்ணிழலார் மருதமரத்தடியில் வந்து களிற்றுருவாய்
வீற்றிருந்து அருள் பொழியும் மாதங்கனே.

14. பூதகண நாதனே புனிதனே பூமண்டலம் காக்க
விக்கினங்கள் தீர்க்க வந்தனையோ
பாதபங்கயங்கள் தொழுவார்க்கு இடர் வராது
காக்க நினைத்தாயோ பானை வயிற்றோனே
சீதப்புனல் வயல்சூழ் மானிப்பாய் மருதடியானே
வெவ்வினைகள் வேரறுப்பவனே
தேவாதி தேவரும் உன்னருள் பெற்றுய்யவென்று
மருதடியில் கோயில் கொண்டனையோ

15. உலகம் யாவையும் தம்முள வாக்கிய அம்மையப்பரை
வணங்கினாய் மாங்கனி பெற்றாய்
திலகம் போல் துலங்கி மானிப்பாய் நகர் விளங்க
நல்லருள்பொழியும் கருணாநிதியே கணபதியே
கலக்கமது போக்கினாய் மானிப்பாய் நகரில் தமிழுடன்
சைவம் நிலைபெறச் செய்தாய் குருவருளாய்
நிலவுலகம் போற்ற நிலைத்திருந்து நாளும்
நல்லருள் வழங்குகிறாய் கணபதியே.

16. சித்திரை வருடப்பிறப்பின் உறுபொருள் உணரச் செய்தாய்
கலாசாரம் பண்பாடு பேண வைத்தாய் கணபதியே
அத்தி முகத்தோனே ஆனைமுகனே அறுகம்புல் அர்ச்சனை
ஏற்று மகிழ்வோனே மக்கள் ஒன்றுகூடி
சித்திரத் தேரிழுத்து சித்தி பெற வைப்பவனே ஓங்காரப்
பொருளே தேங்காயுடைத்து ஆங்காரம் தீர்ப்பவனே
தித்திக்கும் தெய்வத்தமிழ் தேவாரம்பாடி பொங்கல்
மடை வழிபாடு ஏற்று வரந்தரும் மருதடியானே சரணம்

17. மருதடியான் கொடி ஏற்றமென்பார் பக்தர்கள்
குதூகலிப்பார் வீடுகள் சுத்த அலங்காரம் செய்வார்
திருவடி காணப் புறப்படுவார் பாலர் முதல் விருத்தர் வரை
மருதடியான் புகழ் பாடி மகிழ்வார்
திருக்கோவில் வாசல் கண்டு கரங்கூப்பி அரோகரா என்பார்
அங்கப் பிரதட்சணம் செய்வார் பெண்களடி யளப்பார்
உருக்கமாய் உள்ளம் சுத்தமாய் வணங்கி வரங்கள்
பலபெறுவார் உன்னிடம் மருதடியானே.

மருதடியானுக்கு மங்களம்
மருதமரத்துக்கு மங்களம்
சிவனுக்கு மங்களம் அன்ன
சக்திக்கு மங்களம்
சண்டேஸ்வரருக்கு மங்களம்
வைரவர்க்கு மங்களம்
சண்முகனுக்கு மங்களம்
வானவர்க்கு மங்களம்
அடியவர்க்கு மங்களம்
மங்களம் மங்களம்

சுப மங்களம்.

# இணுவில் பதியுறையும் முருகனை வணங்குவோம்



1. சரவணப் பொய்கைப் பூந்தொட்டில் ஆடிய குழந்தை
சரவணனே கார்த்திகை மாதர்கள் தங்கள்
கரங்களில் ஏந்திப் பாலமுதமூட்ட உண்டு களித்தவனே
கார்த்திகேயா கலியுகவரதா கடம்பா
பிரமன் தலையிற் குட்டிச் சிறையிலடைத்துப் பிரணவ
மந்திரத்தைத் தந்தைக் குபதேசித்த சுவாமிநாதா
கரங்கள் கூப்பி வழிபடு மடியவர்க்கருள் செய்ய மேலாம்
இணுவிலில் வந்து கோயில் கொண்டவனே.

2. பெருஞ்சித்தராகி பெரிய சந்நியாசியார் வடிவில் வந்து
உலகப் பெருமஞ்சம் உருவாக்கி உலாவந்தவனே
கருமாமுகில் படியும் வான்முட்டும் கோபுரங்கள் மூன்றும்
உடையவனே சிவனாரின் மைந்தனே இளம் சிவ
குருநாதனே திருமாமுருகனே இணுவை நகர்மேவி
இருந்தனையே சேவற்கொடியுவக்கும் செவ்வேளே
செருமாமுகத்தில் சூரனை அழித்த திருமுருகா வேலாயுதா
இணுவில் பதியுறையும் பேரருளே முருகையா

3. பக்தியால் பரவுவார் தாங்கூடி பரவசமாய் பஜனை செய்து
உன்நாமங்கள் பலவும் சொல்லிப் பாடுவார் ஆடுவார்
முத்திக்கு வழிகாட்டும் முருகனிவனென்று தேங்காயுடன்
பழம்பாக்கு வெற்றிலை வைத்து பொங்கல்மடை பரவி
சித்தத்தை உன்பால் வைத்து வழிபாடு செய்துவப்பார்
ஆவலுடன் ஆலயத்தை அடியளித்து வணங்குபவர் தமக்கு
சித்தி தருபவனே செவ்வேளே உன் சிங்காரப் பவனிதனை
பெருமஞ்சத்தில் கண்டு தொழ பல்லாயிரங்கண்கள் போதாதே

4. போர்க்கோல மேகங்கண்டு தோகை விரித்தாடும்
பச்சை மாமயில் மீதேறிக் காட்சி தருபவனே
தேர்க்கோலப் பவனி காண அடியவர் திருவீதியெலாம்
அலங்கரித்துத் தண்ணீர்ப் பந்தலிலே தேங்காயுடைத்து
ஊர்கோலம் செய்து கொண்டாடி உவக்க நீயும்
முத்துமணி மகுடம் மின்னத் தேரூர்ந்து வருபவனே
போர்க்கோலம் நீக்கி வள்ளிதேவ யானையுடன் வரும்
மணக்கோலமும் கண்டு களிக்கச் செய்பவனே முருகா.

5. புண்ணிய தலமாய் கோவிலுங் குளமும் புனித தீர்த்தக்
கேணியும் அமைத்து புகழுடன் இருந்து
நண்ணிய பக்தர்கட்கு நாளுந்தவறாது இன்னருள் புரிந்த
நொச்சியொல்லைப் பதிமுருகா
தொன்மை வழிபாட்டுத் தலமாய் பெருமையுடன் எழுந்து
விளங்கிய இணுவையம் பதிமுருகா பெருமானே
முன்னம் பக்தர் செய்தவத்தால் சித்தர் பெரியசந்நியாசியார்
பணிபுரிந்தேத்த வளர்ந்த கோவிலுறை பேரருளே.

6. மயிலினம் இருக்கை கொள்ளும் மாண்புறு பதிதனில்
மாமருதும் வேம்பொடு வில்வமும் நின்று நிழல் செய்ய
குயிலினங் கூவிக் குதூகலிக்கும் மாமஞ்ச சோலைகளும்
கனிதரும் மரங்களும் வளஞ் சேர்க்கும் இணுவையில்
அயில் வேலெறிந்து சூரனைச் சங்கரித்த திருமாமுருகனே
ஆறுபடை வீடுடையான் ஆறுமாமுகன் வந்துதித்தான்
மயிலியற் சாயல் மங்கையர் தம்மொடு இனிதமர்ந்து
காட்சி தருஞ் செவ்வேளை வணங்குவோம்.

7. மரணத்தின் பிடியில் அகப்பட்டுக் குகைக்குள் அடைபட்ட
முதற்சங்கப் புலவன் நக்கீரன் துயருளந்து
சரவணனைச் சரணடைந்து தவமேற்கொண்டு பக்தியொடு
திருமுருகாற்றுப்படை பாடமகிழ்ந்து பொல்லாச்
சூர்கொண்ட பூதந்தனை வேல்கொண்டெறிந்து உயிர்கொண்டு
நக்கீரனைசச் சிறைமீட்டு காத்த முருகனிணுவை
ஊர்கண்டு வந்துற்று அமர்ந்து பக்தர்கருள் சுரந்து ஆறுபடை
வீடும் கண்டுறைந்த முருகனைத் தொழுதுய்வோம்.

8. சோகங் கொண்ட குமரகுருபரனுக்கு ஞானமளித்து
பேசுந் திறனளித்துப் பாடவைத்த குருபரன்
மோகம் பிடித்து ஆசைக்கடலில் அகப்பட்டு அலைந்து
நிலைகுலைந்த அருணகிரிநாதருக்கும்
யோகமளித்துத்தன்பதம் நல்கிப் பாடவைத்து திருப்புகழ்
கேட்டு மகிழ்ந்த திருச்செந்தூரனின்று
போகமும் பேரின்ப வாழ்வும் நல்க இணுவையம்
பதி நாடிவந்துற்ற முருகனைப் பரவுவோம்.

9. சிவபூமி என்று தவமூலர் புகழ்ந்துரைத்த மேலாம் ஈழத்
திருநாட்டின் ஓர்பால் அற்புதமாய் விளங்கும்
தவசீலர்கள் சித்தர்கள் பலரைத் தோற்றுவித்த புண்ணிய
பூமியாம் இணுவிலில் கோயில் கொண்ட முருகன்
தைப்பூச நன்னாளில் காளையர்கள் காவடிகள் ஆடிவர பாவையர்கள்
சுமந்த பாற்குட முழுக்காடி மகிழும் முருகன்
முப்போதும் திருமேனி தீண்டுவோர் பூசனை வேத மந்திரங்கள்
ஏற்று அருள்செய்யும் முருகனைத் துதிப்போம்.

10. சித்தாந்த சைவமும் தெய்வத்தமிழும் தழைத்தோங்க
அருள்புரிந்து அறம் வளர்க்கும் நாயகனே
பத்தாந்திருமுறை பாடிய சித்தர் திருமூலர் சொன்ன
திருமந்திரம் கூறும் சங்கத் தமிழானவனே
பத்திக்கும் முத்திக்கும் வித்தானவன் மூவுலகும்தொழும்
முதலானவனே என்றும் பக்தர்கள் தரும்
தித்திக்கும் செந்தேனும், தினைமாவும் முக்கனியும் உண்டு
மகிழும் கானக்குறவள்ளி காந்தனை வணங்குவோம்.



# சாந்தியடியானே சரணம் சரணம்

## காப்பு

ஞானமுதவனே நற்குஞ்சரக் கன்றே அம்பிகை
புதல்வா அவ்வைக்கருள் புரிந்தவா
ஆனைமுகனே அற்புதக் கணபதியே அறுகம்புல்
அர்ச்சனை ஏற்பவரே பரராச சேகரனே
இணுவிலுறை வைரவநாதன் சாந்தியடியான் மேல்
பாமாலை புனைந்தேத்தி வழிபட
ஈனமிலாது அருள்சுரந்தருளி அடியவர் இடர்களையும்
நின்பொற் பாதகமலங்களே காப்பு

1.ஏருழவர் உழுமுழவால் ஏற்றங்கண்ட மருதநில வளத்தின்
சைவப்பெருங் குடிகள் வாழுகின்ற
ஊராம் இணுவைப் பதிதனிலே கோயில் கொண்டாய் வேம்பொடு
தென்னை மா பலா வாழைக்கனிகள் சிந்த
தேனூரும் பொன்னொச்சி மந்தாரை சந்தனம் சாம்பிராணி சண்பகம்
முல்லை மல்லிகை மலர்கள் மணம் வீசும் சோலைசூழ்
நாலூரும் பேசும் பெருமையொடும் புனித தீர்த்தத்தினால் வினைகள்
தீர்க்கும் சாந்தியடியானே சரணமையா

2.விரிஞ்சி வடுகனாய் முகுந்தவடுகனாய் உருத்திர வடுகனாய்
முத்தொழில் புரிந்து உலகம் காப்பவரே
நெருங்கி வந்து இடர் தருந் துட்டரை அழிக்கப்பெரும்
பைரவ மூர்த்தங் கொள்பவரே ஐயனே
விரும்பி வந்து வழிபடுமடியவர்க்கருள் செய்து வாடிய உயிர்கள்
பயிர்கள் வளமுற வான்மழை பெய்பவரே
அருளும் பொருளும் நீயே தெய்வமுங் குருவும் நீயே இணுவில்
பதி சிறக்க மங்கல வாழ்வு அருள்வீரே.

3. பஞ்ச பூதங்கள் ஐந்தும் நானே என்பான்
நாயையும் வாகனம் என்பான்
பஞ்சங்கள் தீர்ப்பான் பழவினை தீர்ப்பான்
பாரினை பார்த்து காத்திடுவான்
வஞ்சங்கள் தீர்ப்பான் வளங்கள் தருவான்
அருள்மழை எங்கும் பொழிந்திடுவான்
நெஞ்சத்தில் இருத்தி வழிபடுவோர்க்கு
முத்தி தந்தருள் செய்திடுவான்

4. நான் முகன் அகந்தை அடக்கிய வீரன்
நாயகன் நானே என்றிடுவான்
பான்மையில் தாய்மை கருணையுள்ளம்
கொண்டவன் வைரவ நாதனிவனே
ஆண்மையில் அவனுக்கு அவனே
நிகராவான் பெரியவன் அவனே
வான் மழை பொழிவான் வானவர்மகிழ
நாமும் மகிழ்ந்து வழிபடுவோம்

5. வேதங்கள் அவனே வேள்வியும் அவனே
முறையாய்ப் பூசைகள் செய்திடுவோம்
பாதகம் தீர்ப்பான் பாவங்கள் அறுப்பான்
சாந்தி தருவான் சாந்தியடியானே
நாததத்துவம் நானே என்பான் உடுக்கும்
ஏந்தி நிற்பான் இணுவில் உறைவானே
பூதங்கள் தோறும் நின்றான் தன்னை
இணுவிலில் கண்டுவழிபடுவோம்.

6. சுருண்டகேசம் படர்ந்தசடையும்
தரித்தே அவன் வருவான்
மருண்ட மனத்துயர் மயக்கம் போக்கும்
மாமலை மருந்துமானவன் சாந்தியடியானே

தெருண்ட உள்ளம் தெளிவுபடுத்த
தெய்வத் தீர்த்தம் தருவானே
வெகுண்ட பார்வை நீங்கிட நாமுமே
வேள்வி தவம்பல செய்வோமே

7. தந்திரவடுகன் சாந்தியடியான் சந்நிதி நாமும்
சென்றுவிட்டால் துயரங்கள் போய்விடுமே
சுந்தரவாழ்வு சுகமாய் வருமே வைரவநாதன்
தருவான் எமக்கு நல்லவரமே என்றும்
மஞ்சனமாட்டி மலர்கள் தூவி ஐயனை நாளும்
வணங்கி மகிழ்வோமே நாமும் திரு
மந்திரம் ஓதிப் பூசனை புரிந்து நற்பெரும்
புண்ணியம் சேர்த்திடுவோம்

8. பொங்கர வணிந்தோன் புத்திரன் அவனே
நீறுதரித் திருப்பான் புண்ணியன் அயனே
அங்கையில் சூலமும் கபாலமும் ஏந்திய
வைரவப் பெருமானே இணுவிலில் உறைபவனே
செங்கை சிவப்ப வரங்கள் தருவான் வாழ்வு
சிறந்திடுமே இங்கிதமாக இணுவில் உறையும்
தங்கக்கழல்கள் அடியினை போற்றி வழிபடுவோம்
தலைசாய்த்து நித்தம் வழிபடுவோம்

9. காலனின் காலன் வைரவப்பெருமான்
கருணைக் கடலாவான் பெரும்
சூலமேந்தும் சூலபாணி இணுவிலில்
உறைகின்றான் நாயும் வாகனமே
நீலமேனியன் நீள் நிலம் போற்றும்
காளி சக்தியுடன் களிப்பானே
ஞாலம் துலங்கிட ஒளியாய் விளங்கும்
வைரவ நாதனைத் துதித்திடுவோம்

10. மரத்தடி கிணற்றடி மலையடிவாரம் சந்திகள்
தோறும் மகிழ்ந்து குடியிருப்பான்
கரத்தினில் கபாலம் ஏந்திய கடவுளை வீரனை
சூலபாணியைக் கரங்கூப்பி வழிபடுவோம்
சிரத்தினில் சடைமுடிதரித்து உடுக்கையுமேந்திப்
பெருஞ் சித்தனுமாகி நின்றான் சிறுந்தொண்டனிடம்
அரிய பிள்ளைக் கறியமுதுண்ண விளைந்தவனை
உவந்து நாமினுவையில் கண்டு வழிபடுவோம்.

11. வில்வந் தாமரை நொச்சியொடு மருக்கொழுந்து
சம்பங்கி பிச்சி மல்லிகைவகை
எல்லாம் சேர்த்து அர்ச்சனை செய்திடுவோம்
அப்பமும் வடையும் அதிரசத்தோடு
வெள்ளைப் பொங்கலும் படைத்து வழிபடுவோம்
வள்ளலே வைரவப் பெருமானே ஐய
கள்ள மற்றவர் மனதில் விரும்பி உறைபவரே
சாந்திதரும் கடவுள் சாந்தியடியானே

12. சரணம் சரணம் சாந்தியடியானே சரணம்
சரணம் சரணம் வடுக நாதரே சரணம்
சரணம் சரணம் சேத்திர பாலனே சரணம்
மூலமூர்த்தியே சரணம் சரணம்
சரணம் சரணம் வடைமாலைப் பிரியரே சரணம்
சரணம் சரணம் சூலபாணியே சரணம்
சரணம் சரணம் நாய்வாகனரே சரணம் சரணம்
சங்கடந்தீர்க்கும் சாந்தியடியானே சரணம் சரணம்

# அருள்மிகு சுதுமலைப் பதியுறையும்
# புவனேஸ்வரி அம்மன் துதி

## காப்பு

வேதநாயகா தென்னிணுவைக் கணபதியே
போதந் தரும் பொற்கரிமுகனே - சீதங்கொள்
சுதுமலைப்பதி அன்னைமேல் துதிபாட
எதுகுறையுமிலாது காப்பாய்.

1. புவன முழுநாளும் பூலோகநாயகியே உமையவளே
புவனேஸ்வரித்தாயே அம்பிகையே சரணமம்மா
சிவனார் பாகமுறைபவளே சிவசக்தியே மலையரசன் மகளே
சிந்தனைக்கும் எட்டாத பெருமையளே
தவமாரும் முனிவரரும் தத்துவ ஞானிகளும் பெருந்தவ
வல்லுநரும் உன்சக்திகண்டு வியந்திடுவர் தாயே
அவமாரும் இவ்வுலகம் அழிவினிற் போகாது காக்கத்
திருவுளங் கொண்டு சுதுமலைப்பதியில் உறைகின்றாய் தாயே

2. அகிலாண்ட நாயகியே அண்டங்கள் அனைத்தும்
ஆட்சி செய்பவளே சிவலோக நாயகியே
மகிதலமீதில் மகிஷனை வதம் செய்த மகிஷாசூரமர்த்தனியே
சிங்கத்தின் மீதேறிப் பவனி வருபவளே
துதி செயும் அடியவர் துயர்துடைக்கச் சித்தங்
கொண்டவளே புவனேஸ்வரியே கருணைக்கடலே
சுதுமலைப் பதிசிறக்க மங்கல வாழ்வுதர அன்னையே
அகமகிழ்ந்து கோயில் கொண்டாய் அம்மா

3. ஆலய மணியின் ஓங்காரநாத ஒலி எங்கும்
கேட்குதம்மா மக்கள் உன்னை நாடி வருகின்றார்
கோலமார் கோவிலுங் கோபுரமுங் கண்டு தொழுகின்றார்
நீயிருக்கும் கொலு அழகில் மயங்குகின்றார்
சீலமார் அழகி சிவன்பாகமது கொண்டவளே உமையவளே
ஆயிரங் கண்ணுடையாய் கண்ணகியாகித் தாயே
ஆலமரத்தடியில் குடியிருந்து காக்கின்றாய் அம்மா
புவனமுழுதாளும் புவனேஸ்வரித் தாயே.

4. காராரும் சோலைகளில் மயிலினங்கள் ஆடும்
குயிலினங்கள் பாடும் பூந்தென்றல் வீசும்
நீராரும் பொய்கைதனில் தாமரைகள் மலரும்
வண்டினங்கள் முரல தேரையொடு நாரை இனம்திரியும்
பாராளும் வேந்தர்களும் கண்டு மனம் மகிழும் பட்டிப்
பசுவினங்கள் பால்சொரிந்து பெருகும்
பேராரும் பெருமைமிகு பெருமாட்டி புவனேஸ்வரி
குடியிருக்க சுதுமலைப் பதிசிறக்குதம்மா

5. சக்தியைப் பிரிந்தறியாச் சிவனுக்கோர் கோவில்
அமைத்தாய் சிவனொடு ஐக்கியமானாய்
சித்தியெலாந் தரும் மூத்தபிள்ளைக்கும் கந்தனுக்கும்
அருகருகே கோயிலமைத்தாய் வைரவருங் குடியிருக்க
முத்திக்கு வித்தானாய் மூவுலகும் தொழுதேத்த குடும்பமாய்
கைலைக் காட்சிதனைத் தந்தாயம்மா தாயே
பக்தர் பரவசமானார் பார்வதியே பரமசிவனைப்
பிரியாதாளும் புவனேஸ்வரியே உமையே

6. தேனுந் தினையும் செந்நெல்லும் விளைவு காணும
திருவாழும் திருப்பதியாம் சுதுமலையில்
வானுந்தி மழை பொழியும் வளமான பூமியிலே
மாபலா வாழைகளும் கனிகள்சிந்தும்
வானுயர்ந்த பனைவளமும் செவ்விளநீர்க்குலைகள்
தாங்கும் தென்னைமரத் தோப்புகளுமுண்டு
தேனுலவும் சோலைகளில் கிளிகளொடு பறவையினம்
குதூகலிக்க புவனேஸ்வரி அருளாட்சி நடக்குதம்மா

7. காசிப்பதியில் நீ விசாலாட்சி காஞ்சியிலே நீ காமாட்சி
சிதம்பரத்தில் சிவகாமியாய் இருப்பவளே
மாமதுரைப் பதியில் நீ மீனாட்சி நயினையிலே நீ
நாகபூசணி திருக்கடவூரிலே நீ அபிராமியே அம்மா
சுதுமலைப் பதியில் சக்தி புவனேஸ்வரியாய் வீற்றிருந்து
அருளும் உமையவளே உனைப் பணிந்தோம்
துதித்தோம் தொழுதோம் நின் பொற்பதங்கள் பற்றினோம்
புவனேஸ்வரியே அருள் தாருமம்மா.

8. கோயிலும் குளமுமாம் சிறப்புடனே வண்ணக்
கோபுர வாசல் சிறப்புமுண்டு வெப்பு
நோயிலும் பிணியிலும் வருந்துபவர் நோய்பிணி
நீக்கும் அருளுமுண்டு அம்பிகையே
பாயிலும் நோயிலும் படுத்திடாமல் பக்தர்களை உன்
மடியில் வைத்துக் காப்பவளே
வாயிலும் மனத்திலும் நனவிலும் கனவிலும் உன்திரு
நாமம் உச்சரித்து வழிபடுவோம் தாயே.

9. தங்கநிறத்தினளே சங்கரி சௌந்தரியே திங்கள் முகத்தினளே
சீறிப்பாயும் சிம்மவாகினியே பொங்குமனத்தினளே
குங்குமந் தருபவளே குலமகளிரைக் காப்பவளே மஞ்சள்
தருபவளே மங்கையர்க்கு மாங்கல்யம் தருபவளே
சங்கமிருந்தவளே சங்கத் தமிழாய் இருப்பவளே கோமகளே
கொங்கலர் மாலை அணிபவளே சிவன்முடியில்
பொங்கிவருங் கங்கையு மானவளே கைலை மலையில்
வீற்றிருக்கும் உமையவளே உனைப் பணிந்தோம்.

10. வேம்பொடு அரசும் ஆலும் வில்வமரத்தொடு பரப்பிய
குடைநிழலில் வந்து தங்கியிருப்பவளே
தாம்படுந் துயரந் தாங்காதே பக்தர் தாயென உன்னிடம்
ஓடி வருகின்றார் அம்பாளே நாடிவருகின்றார்
வேப்பிலை கையில் எடுத்து ஆடுகின்றார் உடுக்கும்
ஏந்திப் பாடுகின்றார் பொங்கல்மடை வைக்கின்றார் வீதிதோறும்
தப்பாமல் சுளகுமடை போடுகின்றார் தேங்காயுடைத்துத் தேரிழுத்து
வருகின்றார் அம்மாதாயே வேண்டும் வரம் தாருமம்மா

11. காவடிகள் எடுத்து ஆடுகின்றார் காளையர்கள் கற்பூரச்
சட்டி எடுக்கின்றார் கன்னியர்கள் பாற்குடங்கள் ஏந்துகிறார்
சேவடிகள் பரவிப் பரவசமாகுகின்றார் மத்தளம்மேளம்
முழக்கி இசைக்கின்றார் தமிழ்வேதம் ஓதுகின்றார்
பூவடி தஞ்சமென்கின்றார் பொன்னடிகள் சரணமென்கின்றார்
பூமாலையோடு பாமாலை சாத்தி வழிபடுகின்றார்
தேவடியார் போல் ஆடுகின்றார் ஆவேசம் கொள்கின்றார் நெஞ்சம்
உருகி வேண்டுகிறார் வேண்டும் வரங்கள் தாருமம்மா

12. நாகங்குடை பிடிக்க நயினையில் இருப்பாயோ
சிதம்பரத்து நடராசனுடன் ஆனந்தநடனமிடுவாயோ
யாகம் செய்யும் உன்னடியவர் பொருட்டு ஆகுதி
ஏற்று அருள்வாயோ கைலைமலையில்
ஆகந்தழுவி அரனுடன் சேர்ந்து இருப்பாயோ அம்மையே
சிவகாம சௌந்தரியே சிம்மவாகினியே
யோகமும் போகமுந் தந்துயிர்களைக் காத்தருளும்
புவனேஸ்வரித் தாயே சுதுமலைப் பதியுறைபவளே

13. சித்தர்கள் பக்தர்கள் சிறந்தநல்ல ஞானியர்க்கு
அருள்முகங் காட்ட அன்னை வருவாள்
முத்துப் பல்லக்கில் ஏறி வருவாள் புவனமுழுநாளும்
சக்தியாய் அவள் வருவாள் காட்சி தருவாள்
எத்திக்கும் அருள்நோக்கம் செய்திடுவாள் பொங்கும்
அருள் ஒளிவீசி வருவாள் அன்னை சோகம் தவிர்த்து
தித்திக்கத் தித்திக்கப் பேரானந்தமாய் அருள் பொழிவாள்
அன்பரை அள்ளி அணைத்திடுவாள் சக்தி

14. சூலமேந்தி வருவாள் அன்னை வாளுமேந்தி வருவாள்
ஆவேசங் கொண்டு வருவாள் தர்மங் காக்க வருவாள்
காலத்தை வென்று வருவாள் அதர்மத்தை அழிக்க வருவாள்
துட்டரை ஒழிக்க வருவாள் துன்பந்துடைக்க வருவாள்
ஞாலத்தைக் காக்க வருவாள் ஞானசீலரைக் காக்க வருவாள்
கோலங்காட்டி வருவாள் கோள்களாக வருவாள்
ஆலமுண்டபோது சிவனை நீலகண்டம் செய்தாள்
அபயமளிக்க வருவாள் அன்னை அன்பரைக் காக்க வருவாள்

15. கம்பரின் நாவினின்று கவிச்சக்கரவர்த்தி ஆக்கினாய் காளிதாசனின்
நாவிலெழுதி காளமேகமாக்கினாய் பேச வைத்து
குமரகுருபரனின் பிள்ளைத்தமிழ் கேட்டு மகிழ்ந்தாய்
மதுரையிலே, திருக்கடவூரில் தோடெறிந்தாய் பட்டரின்
அபிராமி அந்தாதி கேட்டு மகிழ்ந்தாய் கனகமழை பொழிந்து
ஆதிசங்கரரின் கனகதார மாலை கேட்டவளே
சோதிக்காமல் சம்பந்தனுக்கு ஞானப்பால் கொடுத்தாய்
புவனேஸ்வரியே அடியவர்க்கு நீ என்ன கொடுப்பாய்

16. காலனைக் காலால் உதைத்து வதஞ்செய்த திருக்கடவூர்
சிவனாரின் சக்தியே அபிராமித் தாயே
ஞாலமெலாங் கலங்க ஞானிகளுக்கும் முனிபுங்கவருக்கும்
இடர்செய்த மகிஷனை மிதித்து வதஞ் செய்தவளே
பாலால் அபிடேகம் பன்னீரால் அபிடேகம் பஞ்சாமிர்த அபிடேகம்
செவ்விளநீர் கொண்டு அபிடேகம் செய்திடுவோம்
சீலமார் சுதுமலைப்பதி வாழப் பக்தருக்கு நல்வரமாய்
வாழ்வளித்து மங்கலங்கள் செய்திடுவாய்

## மங்களம்

சுதுமலைப்பதி உறையும் புவனேஸ்வரிக்கு மங்களம்
கண்ணகிக்கு மங்களம் சிவனாருக்கு மங்களம்
கணபதிக்கு மங்களம் கந்தனுக்கு மங்களம்
வைரவருக்கு மங்களம் வாழ்பதிக்கு மங்களம்
ஆவினத்துக்கு மங்களம் அந்தணர்க்கு மங்களம்
அடியார்க்கு மங்களம் மங்களம் மங்களம்
சுபமங்களம்

# மருதனார்மடம் வெங்கடேஸ்வரர் பாமாலை

01. ஏர்பூத்த இணுவிலுறை ஏரம்பா எழில் கொஞ்சும்
சீர் இணுவைப்பதி விளங்க வந்த கணபதியே
பார்பூத்த புகழ்படைத்தோய் பரராசசேகரனே
மஞ்சுதவள் கோபுரங்கள் நாலுங்கொண்டோய்
நீர்பூத்த செஞ்சடைச் சிவன் மகனே மூஷிகவாகனா
முத்தமிழை ஔவைக்குபதேசித்த மூத்தகணபதியே
சீர்பூத்த சிறப்புடைய மருதனார் மடத்திலுறை வெங்கடேஸ்
வரர் மேல் பாமாலை பாட அருள்வாய்

02. மண்ணும் மலையும் மறிகடலும் எல்லாம் ஒரு நொடிப்
பொழுதில் விழுங்கியுமிழ்ந்த கண்ணா
விண்ணும் புவியும் விளங்கு வேதியர்தாமும்
தவத்தாரும் போற்றித் துதிக்கும் கார்முகில்
வண்ணா மருதனார் மடமுறைந்து மங்களுக்கு
அருள் சுரக்கவந்த வெங்கடேசா
எண்ணற்ற திருநாமங்கள் கொண்டு ஏற்றுவார்
பிணிதீர்த்து அருள்பொழிந்து காப்பீர் ஐயா

03. கோவலர்தம் கோவிந்தா கோகுலத்துக் குலவிளக்கே
நந்தகோபன் மகனே நாராயணா
பாவலர் போற்றும் பரந்தாமா பாற்கடலில்
பொறியரவப் படுக்கைமேல் பள்ளிகொள்ளுங்
காவலரே காகுத்தா மூன்றடியால்
உலகளந்த பெருமாளே வெங்கடேசா
கோலமார் அழகு காணப் பக்தர்கள் கூடிவிட்டார்
தெய்வ அருள் புரிந்து காட்சி தருவீரையா

04. கார்முகில் வண்ணா காகுத்தா காளிங்கன் தலைமிசை
நடம்புரிந்த கண்ணா கோபியர் கொஞ்சும் ரமணா
பார்முழுதுமாண்டு காத்து வரும் பரந்தாமா பாற்கடலில்
பாம்பணையில் துயில் கொள்வோய் பாண்டவர்
போர் முடிக்க அர்ச்சுனன் தேர்ச் சாரதியாகி நின்று அறங்காத்த
பார்த்த சாரதியே பத்மநாபா கேசவா நாரணனே
பூர்வ ஜென்மத் தொடர்பால் சூடிக்கொடுத்த சுடர்க்
கொடிக்கருள் செய்தோய் பக்தர்க்கு அருள்வாயே

05. இராமனாய்ப் பலராமனாய் கிருஷ்ணனாய்க் கண்ணனாய்
நரசிம்மராகி இரணியனைக் கொன்றாய் உலகைக்காக்க
வராகமாகிச் சுறாவடிவமாகிக் கூர்மமாய் அவதரித்து
பக்தர்கட்கு அருள்புரிந்த கோவே வைகுந்தா
பிராணனாய் நின்றுலகைக் காக்கும் கடவுளே கோவர்த்தன
கிரியைக் குடைபிடித்த குணக்குன்றே கோவலரே
அராவிடைப் பள்ளி கொள்ளும் பரந்தாமா மருதனார்
மடத்திலுறை வெங்கடேசா சரணடைந்தோம்

06. விருப்பொடு பக்தர் வேண்டும் வரமளிக்கும் வெங்கடேஸ்வரா
காட்சியும் நீயே சாட்சியும நீயே காவலும் நீயே
திருவடி தொழுதோம் மனமிரங்கி மருதனார் மடம்மேவிய
வெங்கடேஸ்வரா அன்பர்க்கருள வேண்டி
பெருந்தவத்தால் இணுவைத் திருவூரில் எழுந்தருளி அருளுடன்
இருக்கை கொண்டாய் ஐயனே வணங்குகிறோம்
குருவடிவாகி வந்தோய் குவலயம் உய்யவே ஸ்ரீனிவாசா
மனமிரங்கி ஆண்டளருள் செய்வீரையா

07. அஞ்சன வண்ணன் அமுதகானம் பொழியும் கண்ணன் கோபியர்
குலாவி மகிழும் கோபாலன் கிருஷ்ணன்
தஞ்ச மெனவந்த அன்பருக்கு தன்னை அடைக்கலங் கொடுக்கும்
அண்ணல் ஆனந்தபரவச மூட்டும் மாயன்
வஞ்சனைச் செயலால் போரிடவந்த கௌரவசேனை
அழித்துப் பாண்டவர் துயர்தீர்த்த மன்னன்
நெஞ்சுருகி வேண்டுமன்பர்க்கிரங்கி மருதனார்மட
முறைந்தவரே காத்தற்கடவுளே காப்பீர் ஐயா

08. பூம்பாளை மடல்விரிந்து முன்னே நின்று கவரிவீச தாங்காதே
செவ்விளநீர்க்குலை சரிந்து தென்னையிலே தொங்க
மாங்கனிகள் பலசிந்து மாமரச்சோலையிலே பாங்கான
பழுத்த பலாப்பழங்கள் உண்டு பறவையினம் பாராட்ட
தீம்பால் சுரந்து பால் சொரியும் பசுவினங்கள் நிறைந்த
நீங்காத செல்வமலி இணுவிற்பதி சிறக்க
பாம்பணை மேற்பள்ளி கொள்ளும் பரந்தாமா வெங்கடேசா
பாற்கடல் விட்டிறங்கி வந்தனையோ மாதவா

09. வஞ்சகரை அழிக்கப் போர்த்திட்டமொன்று வகுத்தாய்
குருசேத்திரம் தர்ம சேத்திரமானது
அஞ்சி மனந்தளர்ந்த அர்ச்சுனனுக்கும் உலகிற்கும்
நல்லதொரு கீதோபதேசம் தந்தாய் மன்னா
அஞ்சனவண்ணா வேங்குழலில் அமுதகானம் பொழியும்
கண்ணா மருதனார்மடமுறையும்
வெங்கடேசா நின்னை வணங்குவார்க்கு நல்லருள்
சொரிந்து நாடுநலம் பெற அருள்வாய் ஐயா.

மங்களகரமான சர்வசித்து வருடம் தைத்திங்கள் 19ஆம் நாள்
ஞாயிற்றுக்கிழமை (01.02.2009)

# இணுவை ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையார் மகா கும்பாபிடேகத்தின்போது பாடிய

# குடமுழுக்குப் பாமாலை



01. விஞ்சுபுகழான் சிங்கைப் பரராசசேகர மன்னன்
பணிந்த ஐங்கரனே! ஆனைமுகனே
மஞ்சுதவள் கோபுரங்கள் நான்மாடக் கூடலென எழுந்துயர்
அற்புதக் கலைப்படைப்புக் காட்டி நின்றோய்
நெஞ்சார ஐங்கரனே என்று நினைத்துருகு மடியவர்தம்
அல்லல் தீர்த்தாட்கொள்ளும் கொழுங்கைக்
குஞ்சரக் கணபதியே நின்திருக்குடமுழுக்குப் பாடிமகிழ்
நின்பாதக் கமலங்களே காப்பு.

02. வானுயர்ந்த கோபுரங்கள் நாற்புறமும் எழுந்து
செழுங்கலைக் குன்றமென நிலைத்து
கோனுயர்ந்த பரராசசேகர மன்னனவன் இணுவைநகர்
ஆட்சிப் பெருமைதனைப் பேச
தானுயர்ந்த கோயில் அன்பர்பணி செய்யநாளும்
அகமகிழும் ஐங்கரனே நின்
தேனுந்து மலர்ப்பாதத் தருளுண்டு அன்பர் மனங்களிக்க
நீருவந்து குடமுழுக்காடி அருள்வீர் ஐயா!

03. மூலப் பொருளே மூத்த விநாயகனே! முக்கண்ணனே!
மண்ணுலகும் விண்ணுலகும் ஏத்தும்
கோலப் பெருமையனே கொழுங்கைக் குஞ்சரக்கடவுளே!
கணபதியே நின்குடமுழுக்குக் காண
ஞாலமெல்லாமாசை கொண்டதையா! ஆனைமுகத்தோனே
பரராசசேகரன் பணிந்த பரமேன!
காலனைக் காலாலுதைத்த கடவுளின் அருட்குமரா!
கோலத்திருமுழுக்கு ஆடி அருள்வீர் ஐயா

4. கலையுலகு காணாத கருணை வடிவே! கற்பனைக்குமெட்டாத
அற்புதக் கணபதியே! பஞ்சமுகனாய்
சிலைவடிவாய், ஓங்கார ரூபனாய், ஒய்யார ஓவியமாய்,
கலைநீங்காத அருட்பொலிவு கொண்டவனே!
மலைமகளின் மகனாய்ப், பாலகணபதியாய் ஏகதந்தனாய்
எவ்வுருவோ அவ்வுருவாய், அருட்பொலிவாய்
கலைக்கோயில் கொண்டிங்கு எழுந்தருளி ஆள்பவனே!
பக்தர் மனங்குளிரக் குடமுழுக்காடி அருள்வீர் ஐயா!

5. இந்திரனும் இமையவரும் இருடிகளும் கூடி வந்தனைகள்
பல தந்து வாழ்த்தி நின்றார் வானில்
சந்திரனும் சங்கரனும் சிவகாமித்தாயும் சித்தங்களிகூர்ந்து வாழ்த்த
இணுவைப்பதி முருகன் இன்பமுடன் பெருமை கொள்ள
துந்துபிகள் முழங்க, நந்திமுதற் தேவகணங்கள் உவகை கொண்டாட
ஐங்கரனே! இணுவைப் பரராசசேகரனே!
தொந்திக் கணபதியே முக்கண்ணனே! மூவுலகும் தொழும்தேவே!
எம்பிணிதீர மங்கலக்குடமுழுக் காடியருள்வீர் ஐயா!

6. வாக்கிற்கும் மனதிற்கும் எட்டாத பரம்பொருளே!
விநாயகனே வினைமுழுதுந் தீர்ப்பவனே
ஏக்கம் தவிர்த்தெம்மைக் காத்தருள எழுந்தருளும் ஏரம்பனே!
இணுவையம் பதியாளும் ஐங்கரனே!
காக்கும் கடவுளே! கஜமுகனைச் சங்கரித்த கருணையனே!
கங்கைதங்கு சடையோன் மகனே!
பூக்குமிப் பூவுலகில் புண்ணியங்கள் வளர்ந்தோங்கக்
குடமுழுக் காடி அருள்வீர் ஐயா!

7. ஒருமருப்பினை ஒடித்துப் பாரதக் கதையினைத் திருத்தமாகப்
பொருப்பிடை வரைந்த விநாயகனே!
திருநாரையூரில் நம்பிக்கு அருள் சுரந்தாய்; திருமுறை காட்டினாய்
தென்னிணுவைப் பதிவாழும் பரராசசேகரனே!
திருமுறை தந்த சிவனருட் செல்வர்கள் அறுபத்து மூவர்க்கும்
திருவுரு அமைக்க அருள் புரிந்தாய்
அருமறை ஆகமவேதங்களோடு திருமுறைக் கீதங்கள் ஒலிப்ப
திருக்குடமுழுக்காடி அருள்வீர் ஐயா!

8. குருவும் அருளும் தெய்வமும் நீயே வழிபடுமடியவர்
வரமும்நீயே பரமதயானனே! பார்வதி மைந்தா!
திருவும் கல்வியும் சீருந்தருவாய் தீராத வினைகளைத்
தீர்த்து வைப்பாய் ஆனைமுகனே!
முருகனுக்கு மூத்த கணபதியே! மூவுலகுந்தொழும் கற்பகமே!
இணுவையம் பதிவாழ வந்தவனே
கரும்பும் கதலியும் மாங்கனியும் விரும்பி உண்ணும் கணபதியே!
தெய்வக் குடமுழுக்காடி அருள்வீர் ஐயா!

9. வாரண முகத்தவன் என்றுசொன்னார் இணுவில் வாழ்பெருங்
கோயிலும் இதுவென்றார் உயர்
ஆரணமோதும் வேதியரும் ஐயன் வேதவேள்விகள்
பூசனைகள் புரிந்து நின்றார்
பூரணபொற்குடம் ஏந்திநின்றார் செல்வன் சேவடி
மனதில் பதித்துநின்றார் மூல
காரண மானகணபதியே! எமக்கு வாழ்வளிக்கும் கற்பகமே
தெய்வக் குடமுழுக்கு ஆடியருள்வீர் ஐயா!


மங்களம் சுபமங்களம் ஸ்ரீபரராச சேகரற்கு மங்களம
அன்னை சிவகாமிக்கும் நடராசருக்கும் மங்களம்
பஞ்சமுக விநாயகர்க்கும் பாலகணபதிக்கும் மங்களம்
தெய்வ குஞ்சரிவள்ளி மணாளன் முருகனுக்கு மங்களம்
தெய்வத் திருமாலுக்கும் தேவர்கட்கும் மங்களம்
வைரவப் பெருமானுக்கும் சண்டேசுவரருக்கும் மங்களம்
அறுபத்து மூவர்க்கும் அந்தணர்க்கும் மங்களம்
வேதசிவாகமங் கட்குமங்களம் சைவத்திரு முறைகளுக்கு மங்களம்
ஆநிரைக்கு மங்களம் அடியார்க்கு மங்களம்
அப்பாலும் அடிசார்ந்த அடியவர்க்கு மங்களம்
மங்கல மங்கையர்க்கு சுபமங்களம்
இணுவையம்பதி மக்களுக்கு மங்களம் சுபமங்களம்

சுபமங்களம் சுபமங்களம்



# கோண்டாவில்பதி அருள்மிகு மகாகணபதி இராசகோபுர கும்பாபிடேகத்தின் போது பாடிய குடமுழுக்குப் பாமாலை

காப்பு



ஞானமுதல்வனே விநாயகனே விக்கினங்கள் தீர்க்கும்
மூத்த கணபதியே மூஷிகவாகனனே
தேனார் மலர்க்கொன்றையணி சிவனார் வணங்கும்
கணபதியே குணபதியே ஆனைமுகனே
வானமர் மலர்ப்பொழில் சூழ் கோண்டாவில் பதியுறைந்து
மக்கள் குறைதீர்க்கும் மகா கணபதியே
வானுயர்ந்த கோபுரம் கும்பாபிடேகங் கண்டு கவிபாட
நின்பொற் பாதக்கமலங்களே காப்பு.

1. கோபுர தரிசனம் கோடி புண்ணியம் பிறவிப் பிணி அகலும்
பேறுபெற்றார் கோண்டாவில் பதிமக்கள்
காவுயர் சோலை வனப்புமிகு பதியிலுறை மகாகணபதிக்குக்
கோயில் வாசலிலே அற்புத சிற்பக்கலை மிளிரும்
தேவுயர் இராசகோபுரம் ஒன்று வானுற எழுப்பிவிட்டார்
வர்ணங்கள் தீட்டி பொற்கலசங்கள் வைத்துவிட்டார்
கோவிலுயர் தெய்வீகப் பணிசிறக்க கோண்டாவில் பதிசிறக்க
மகாகணபதியே கோபுரக் குடமுழுக்காடியருளே.

2. மூலப்பொருளே மூத்த கணபதியே முக்கண்ணனே மூவாமுதலே
மூஷிக வாகனா மோதகப் பிரியா
கோலப் பெருமையனே ஞாலம் முழுதும் ஆளும் மகாகணபதியே
ஞானமுதல்வனே நற்குஞ்சரக் கன்றே
ஏலவார் குழலாள் உமைமகனே ஆறுமுகனின் அண்ணனே
அறுகம்புல் அருச்சனையை ஏற்றுமகிழ்பவனே
சீலனே சிந்தூர வண்ணனே சித்தங்களிகூர கோண்டாவில்
பதியுறைவோய் தெய்வக் குடமுழுக்காடி அருளே.

3. மருத நிலவளமும் மாண்புறு தென்னைகளும் மாபலா
வாழைக்கனிகள் தரும் செல்வவளமும்
கருதரிய கற்பகதருக்களும் ஓங்கிவளர் வளமான பூமி
சித்தர் பலர் வாழ்ந்த சிவபூமி சிறக்க
அருமறைகள் ஆகமங்கள் திருமுறைகள் ஓதிவழிபாடாற்றும்
அந்தணரும் அடியாரும் நம்பி வாழும்
திருக்கோயில் காளியம்மன் உடனுறையும் மகாகணபதியே
பக்தர் மனங்குளிர கோபுரக் குடமுழுக்காடியருளே.

4. செங்கமலத் திருவும் திருமாலும் பொங்கரவப் படுக்கை
விட்டெழுந்தார் நின்குடமுழுக்குக் காணவென்றே
அங்கண் மாஞாலமும் அகமகிழ்ந்து ஆர்வமுடன் எழுந்து
நின்குடமுழுக்குக் காண ஆசை கொண்டதையா
கொங்கலர் சோலைசூழ் கோண்டாவிற் பதியுறையும்
மகா கணபதியே அருள்சிறந்து அகமகிழ்ந்து
அங்கயற்கண்ணி அம்மைமகிழ அரன்மகிழ அமரரெலாம்
மகிழ கோபுர கும்பாபிடேகம் ஆடியருளே.

5. தொந்திக் கணபதியே அந்திவான் செம்மை நிறத்தினாய்
திருமாலுக்கருள் சுரந்தாய் திருமுறைகள் தானெடுக்க
நம்பிக்கு அருள் புரிந்தாய் பாரதத்தைப் பர்வதத்தில்
ஒற்றைக் கொம்பொடித்து எழுதினையே
முத்து தமிழை மூதாட்டி ஔவைக்கு உணர்த்திய மூத்த
கணபதியே பிரணவப் பொருளே முக்கண்ணனே
தந்துபி முழங்க தேவகணம் பொலிந்து நின்றாடி மலர்மாரி
பொழியக் கணபதியே குடமுழுக் காடியருளே.

6. கற்பூர தீபமேந்துகின்றார் தூபதீபங்கள் காட்டிநின்றார்
ஐயன் திருவடி மனதில் பதித்து நின்றார்
அற்புதம் என்று சொன்னார் ஆனைமுகனென்று சொன்னார்
கயமுகனைச் சங்கரித்த கணபதி என்று சொன்னார்
சொற்பதம் கடந்த சிவன்தான் என்றார் பூதகணநாதன்
என்றார் அற்புதங்கள் பல பேசி நின்றார்
நற்பதம் அடியார்க்கு நல்கிடவே ஞானக்கணபதியே
தெய்வக் குடமுழுக்காடி அருள்வீரையா

7. இந்திரனும் இமையவரும் இருடிகளும் பூதகணங்களும்
வானில் பொலிந்து நின்றாடு கின்றார்
சந்திரனும் சங்கரனும் சிவகாமியுடன் சேர்ந்தே தாயவள்
காளியும் களிநடம் புரிகின்றார்
துந்துபி முழக்கி வானம் மலர்மழை பொழிந்து வாழ்த்தி
மகிழ்ந்து கொண்டாட தும்பிக்கையானே
தொந்திக் கணபதியே செல்வமலி கோண்டாவிற்பதி சிறக்க
மக்கள் பிணிதீர மங்கலக் குடமுழுக்காடி யருள்க.

8. வேதங்கள் ஓதுகின்றார் வேதியர் வேள்விகள் பூசைகள்
பற்பல செய்துநின்றார் அருட்
கீதங்கள் பாடிநின்றார் பக்தர் தெய்வத் திருமுறைகள்
பண்ணோடிசைத்து நின்றார் கணபதி
நாதன் அருளை வேண்டிநின்றார் ஐயன் கணபதிபாதமலர்
மனதில் பதித்து நின்றார் ஆகுதிகள் தந்து
சீதங்கொள் பூரணபொற்குட மேந்துகின்றார் கோண்டாவில்
பதியுறையும் கணபதியே தெய்வக் குடமுழுக்காடியருள்க.

9. திருவும் கல்வியும் சீருந் தழைக்க அருள்பவன் நீயே
குவலயம் காத்திடும் மகா கணபதியே ஐய
குருவும் அருளும் தெய்வமும் நீயே வழிபடுமடியவர்
வரமும் நீயே பார்வதி மைந்தன் நீயே
திருவருள் தந்து தீராவினைகள் தீர்த்திடுவாய் ஆனைமுகா
சுரும்பார் மலர்கொண்டு அர்ச்சிப்போம்
கரும்பும் கதலியும் மாங்கனியும் தருவோம் ஐய மங்கலத்
திருக்குடமுழுக் காடியருளே.

10. மனம் வாக்கிற் கெட்டாத பரம்பொருளாய்ச் சிவனாய்
பூதகணபதி நாதனாய் உமை மகனாய்
தினம் தினம் வழிபடு மடியவர் இடர் களைந்து
அற்புதங்கள் காட்டும் மகா கணபதியே
தனந்தந்து கல்விதந்து நல்ல மனந்தந்து அருளும்
தெய்வமே! கோண்டாவிற்பதி யுறைபவரே மக்கள்
மனத்திருந்து வாழ்வளிக்கும் கற்பகமே "நற்பதம்"
நல்கத் தெய்வக் குடமுழுக் காடியருள்க.

மங்களம் சுபமங்களம் மகா கணபதிக்கு மங்களம்
அன்னை சிவகாமிக்கும் சிவனுக்கும் மங்களம்
கோண்டாவில் பதியிலுறை காளிக்கு மங்களம்
வேதசிவாகமங்களுக்கு மங்களம்
சைவத்திருமுறைகளுக்கு மங்களம்
அந்தணர்க்கு மங்களம் அடியார்க்கு மங்களம்
மங்கையர்க்கு மங்களம் கோண்டாவில்
பதிவாழ் மக்களுக்கு மங்களம்

மங்களம் மங்களம் சுபமங்களம்.

21-07-2014

# தையிட்டி அரசடி அருள்மிகு
# சித்திவிநாயகர் ஆலயக்
# குடமுழுக்குப் பாமாலை

காப்பு



ஏர்பூத்த இணுவிலுறை ஏரம்பா பார்பூத்த எழில்
    கொஞ்சும் பஞ்சமுக விநாயகரே கணபதியே
நீர்பூத்து அலை தவழும் சிறப்புடைய தையூர் அரசடி
    சித்தி விநாயகர் குடமுழுக்குப்பாமாலை பாட அருள்வாய்.

1. முந்துங்கள் மூவா முதல்வனை வணங்கி அருள்
    பெறுங்கள் அத்திமுகத்தவனைப் பணிமின்
சித்தியெல்லாந் தருபவனைச் சிந்தை செய்மின்
    தொழுமின் தொண்டு செய்மின்
புத்தி தருவான் பூவுலகில் புகழும் தருவான்
    அறந்தவறா நெறியும் தருவான்
முத்தி தருவான் மூவுலகும் போற்றும் பேறு
    தருவான் அரசடி சித்தி விநாயகனே

2. வேதநாயகன் வேழமுக நாயகன் விதிக்கு
நாயகன் வானவர் போற்றும்
பூதநாயகன் புவிக்குநாயகன் புண்ணிய
நாயகன் தையூர் அரசடி நாயகன்
ஓதநீர் வேலியாவுடைய ஓங்கார நாயகன்
அலைகடல் வணங்கும் தையூர் நாயகன்
சீதநாயகன் அரசடி சித்திதரு நாயகன் குடமுழுக்கு
ஆடல் காண வாரீர்

3. வானுயர்ந்த அரசமரம் நாற்புறமும் பரந்தெழுந்து
நான்மாடக் கூடலெனக் காட்சிதரும்
கோனுயர்ந்த அரசே அரசமரத்தடியில் நீயாக
வந்து குடிகொண்டு எழுந்தருளி அருள்செய்ய
தானுயர்ந்து கோயில்கொண்டாய் அன்பணி செய்ய
அகமகிழும் சித்தி விநாயகர் மூவாமுதலே
தேனுந்து மலர்ப்பாதந் தந்தருளி அடியார்க்கருள் செய்ய
நீயுவந்து தெய்வக்குட முழுக்காடியருளே

4. நாடிழந்து நகரிழந்து நலிவுற்று ஓடி இருபதொடு
எட்டாண்டுகள் அல்லலுற்று
நாடி வந்தோம் பாழடைந்த எம்மனைகள் பார்க்க
வந்தோம் அரசடியைத் தேடி வந்தோம்
பீடுடனே அரசடியில் ஊறின்றி அரசோச்சி நீயிருக்கும்
தெய்வீகப் பொலிவு கண்டோம்
காடடர்ந்த தையூர் மீண்டும் தெய்வீகப் பொலிவு
காணக் கணபதியே தெய்வக் குடமுழுக்காடியருள்க.

5. தையூர் அரசே அரசடி சித்தி விநாயகனே
தஞ்ச மென்றவர்க்கருளும் தயாநிதியே
மையூர்ந்து மேகம் கவிந்து மழைபொழிய
தையிட்டி வாழ்மக்கள் மனங்குளிர
பையார்ந்த நாகம் குடைபிடிக்கும் நாரணனும்
நாராயணியும் வந்து ஆசி கூற
உய்யவே உந்திக் கமலத்து அயனும் ஆசிகூற
தையூர் அரசடியானே குடமுழுக்காடி அருள்க.

6. கைவார் வாரண முகத்தவனே கஜமுகனைப்
போரில் சங்கரித்து அருள்பவனே
மையார்ந்த கண்ணி உமைமகனே மாதங்கனே
காலனைக் காலாலுதைத்த கடவுளின் அருட்குமரா
செய்யார் திருமேனி செழிக்க தையூர் வாழ்
மக்கள் மலமாசு அகற்றி அருள்செய்து
மெய்யார் திருமேனி காட்டி திருவருட்
பேறருள ஐயா! மனமகிழ்ந்து குடமுழுக்காடியருளே!

7. திருநாரை ஊர்நம்பிக்கு அருள் சுரந்தாய்
திருமுறைகள் தானெடுத்து உதவினாய்
ஒருமருப் பொடித்து மாமேரு மலையில்
மாபாரதக் கதையை எழுதிய கணபதியே
கரும்பும் கதலியும் விரும்பு மாங்கனியும்
மனமுவந்து படைக்க உண்பவரே தையூரரசே
அருமறை ஆகமம் திருமுறை வேதங்கள் ஒலிசெய்யத்
தெய்வத் திருக்குடமுழுக் காடியருளே.

8. சங்கரனும் சந்திரனும் சிவகாமித் தாயும் உளம்
மகிழ்ந்து வாழ்த்துகிறார்
இங்கிதமாய் இந்திரனும் இமையவரும் இருடி
கணங்களும் வானினின்று வாழ்த்துகிறார்
சங்கு முழங்கிச் சாகரங்கள் அவைக்
கரங்கள் நீட்டி வாழ்த்தினவே ஐயா
துந்துபி முழங்கி பூதகணங்கள் கொண்டாட
தொந்திக் கணபதியே மங்கலக் குடமுழுக்காடியருளே

9. தோரணமும் மலர்த்தொடையும் தூக்கி நின்றார்
தான்தோன்றி வாரணம் இதுவென்றார்
ஆரணமோதும் வேதியரும் மாதங்கன் பெயர்
அரசடி சித்தி விநாயகர் என்றுசொல்லி
பூரண பொற்குடம் பொலிவுற வைத்துநின்றார்
பொற்புறு பூசனைகள் யாவும் முடித்து நின்றார்
காரண காரியமானவரே கற்பக விநாயக! முக்கண்ணனே
வாழ்வு செழிக்கக் குடமுழுக்காடியருளே.

30.04.2017 அன்று கும்பாபிடேகத்தின்போது இறுவட்டாக
வெளியிடப்பட்டது

வெங்கடேஸ்வரர் துணை

# இணுவில் திருப்பதி

## அருள்மிகு

# ஸ்ரீ வெங்கடேஸ்வரப் பெருமான்

# திருவூஞ்சல்

### காப்பு

செங்கமலத் திருமகள் மார்பன் திருக்கரத்தில்
சங்கு சக்கர முடையான் திருமுடியான்
அங்கண் மா ஞாலம் அணிதிரண்டேத்தும் திருவரங்கம்
விட்டிறங்கி இணுவில் மருதனார் மடத்தில்
தங்கிக் கோயில் கொண்ட வெங்கடேஸ்வரர் மேல்
திருவூஞ்சல் பாடி மகிழ இணுவில்
ஐங்கரன் பார் போற்றும் ஸ்ரீ பரராஜசேரகனின்
பொற்பாதங்கள் என்றுங் காப்பதாமே.

1. சிவபூமியென விளங்கும் ஈழமணித் திருநாட்டின் வடபால்
புகழ் பூத்த சித்தர்களால் வளம்பெற்ற
சிவம் பூத்த இணுவை மண்ணில் மருதநிலவளமும் மாண்புறு
சோலைகளும் சூழ்பதி மருதனார் மடத்தில்
தவம் பூத்தா மென்னத் தரணி காக்க வந்து கோயில் கொண்ட
வெங்கடேசா திருப்பாற்கடல் விட்டிறங்கி
இதம் பார்த்து இணுவில் மேவி இலக்குமி நாராயணனாய்
காட்சி தருவோய் இங்கிதமாய் ஆடீரூஞ்சல்

2. போற்றுயர் தவத்தின் மிக்கோர் பெருஞான முனிவர்தாமும்
தோற்றிய புண்ணிய பூமி பொன் விளையும் பூமி
சேற்றுயர் உழவர் வாழும் செழுங்கலை மிளிரும் பூமி
நாற்றிசையும் புகழ் மணக்கும் பூமி
ஏற்றுயர் வளங்களாலே ஏற்றமும் வாழ்வும் பெற்றோர் வாழும்
சீரிணுவைத் திருவூர் மருதனார்மடம் உறைந்து
போற்றுயர் அனுமன் தானும் பல்லப்பை வைரவரும்
அருகிருந்து அருள் பொழிய வெங்கடேசா! ஆடீரூஞ்சல்

3. எண்ணரிய மீனினங்கள் சூழுவாளும் தூய நிலாஒளிரும்
மருதனார் மடத்தில் மேகமெனும் பந்தரிடை
தண்ணொளியாய் விளங்கும் நால்வேத மெனுந்தூண்கள்
நாட்டி ஓங்காரநாத பீடங்கூட்டி
பண்ணொளிரும் பலகலையாம் பொன்னார மணிகள்
தொங்கும் முத்துவைரத் தாமந்தூக்கி
விண்ணொளிரும் பொன்னூசல் இனிமர்ந்தமர்ந்து
ஸ்ரீ வெங்கடேசா! உலகமுய்ய ஆடீரூஞ்சல்

4. நந்தியொடு நாரதரும் வந்து இசை பாட நான்முகனும்
இந்திரனும் இசைந்தே வடந்தொட்டாட்ட
முந்தி வந்து நாமகளும் பூமகளும் கவரிவீச அனுமன்
வந்தனைகள் பல செய்து பணிந்து நிற்க
நந்தகோபாலா நாரணனே! வம்புலாம் மலர்க் குழலாராய்ச்சியர்
வெண்ணை திருடியுண்ட கண்ணா!
வந்தனைகள் பலதந்தோம் வணங்கினோம் வெங்கடேசா!
மருதனார் மடமுறைவோய் ஆடீரூஞ்சல்.

5. பூம்பாளை மடல் விரித்து முன்னேநின்று கவரிவீசத்தாங்காதே
சேவ்விள நீர்க் குலைகள் சரிந்து தென்னையிலே தொங்க
மாங்கனிகள் பலசிந்தும் மாமரச் சோலையூடு பாங்கான பழுத்த
பலாப்பழங்களுண்டு பறவையினம் பாராட்ட
தீம்பால் சுரந்து பால் சொரியும் பசுவினங்கள் நிறைந்த
நீங்காத செவ்வமலி இணுவிற் பதிசிறக்க
பாம்பனைமேல் பள்ளிகொள்ளும் பரந்தாமா! வெங்கடேசா!
பக்குவமாயிருந்து பக்தர்க்கருள ஆடீரூஞ்சல்.

6. இராமனாய்ப் பலராமனாய் கிருஷ்ணனாய் கண்ணனாய்
நரசிம்மமுமாகி இரணியனைக் கொன்றாயன்று
வராக மாகிச் சுறாவடிவமாகிக் கூர்மமாகி உலகைக்காத்துப்
பக்தர்கட்கு அருள்புரிந்த கோவே!
பிராணனாய் நின்றுலகைக் காக்கும் கடவேுளே கோவர்த்தன
கிரியைக் குடைபிடித்தாய் குணக்கடலே
அராவிடைப் பள்ளிவிட் டெழுந்து மருதனார் மடத்திலுறை
வெங்கடேசா உலகமுய்ய ஊஞ்சல் ஆடியருள்க.

7. கௌவை நீர்வேலியாடையாக பாரண்டம் திருவடியாய்க்
காற்றைத் திருமேனியாக்கி அளக்கும்
செவ்விய மாதிர மெட்டும் தோள்களாக வானமே திரு
முடியாகி நின்ற திருமாலே! மணிவண்ணா!
தெய்வ மணங்கமழும் திருநகரா மிணுவை மண்ணில்
வளம் பெருக அருள் பெருக வந்தமர்ந்த
தெய்வமே வெங்கடேசா மஞ்சுலாம் வானத் திருந்து வானவர்
மலர்தூவ மகிழ்ந்து ஆடீரூஞ்சல்.

8. திருப்பாற் கடல் கடைந்து எழுந்தமுதம் உண்ணக்
கொடுத்துவந்தாய் தேவர் துயர்தீர்த்தாய்
திருமாலே கம்சன் நெஞ்சம் நடுங்கியழிய ஒழித்த பெருமாளே!
வண்டுலாஞ் சோலைசூழிணுவை மக்கள்
பெருவரத்தால் பெற்றபேறே! பெருமாளே! சங்குசக்கரம்
ஏந்தி நின்றோய் வங்கக்கடல் கடந்து
திருப்பதி தனையும் விட்டு மருதனார் மடஞ்சிறக்க வந்தமர்ந்த
வெங்கடேசா வெம்பிணிகள்தீர ஆடீரூஞ்சல்.

9. பார்த்திபனுக்குக் கீதை சொன்ன கண்ணா ஆடீரூஞ்சல்
மாவலியை மூன்றடி மண்கேட்ட வாமனா ஆடீரூஞ்சல்
கார்மேக வண்ணா ஆடீரூஞ்சல் கோவர்த்தன கிரியைக்
குடையாகப் பிடித்த வைகுந்தா ஆடீரூஞ்சல்
பார்மிசை பாண்டவர்க்குத் தூதுநடந்த கிருஷ்ணா
யாதவர் குலஞ் செழிக்க ஆடீரூஞ்சல்
பேர்மேவும் இணுவை நகர்ப் புண்ணியனே ஆடீரூஞ்சல்.
மருதனார் மடத்திலுறைபரே ஆடீரூஞ்சல்.

10. மழையாடுஞ் சோலைக் கார்மேகங்கண்டு மயிலாட ஆடீரூஞ்சல்
மாம் பொழில்வாய் குயில் கூவ ஆடீரூஞ்சல்
வளையாடுங்கையார் வம்புலாம் மலர்பறித்து மாலைகள்
பல சாத்திடுவார் மணிவண்ணா! ஆடீரூஞ்சல்
துளையாடும் நின் வேங்குழல் ஓசைகேட்டு பக்தரெல்லாம்
கூடித் துயர் தீர்ந்திடவே ஆடீரூஞ்சல்
குழையாடும் கோமளனே, கேசவனே, மணிவண்ணா
இணுவிலுறை வெங்கடேசா! ஆடீருஞ்சல்.

வாழி

திருமாலும் திருமகளும் வாழி! வாழி!
இணுவிலுறை வெங்கடேசர் வாழி! வாழி!
திருவாழும் சங்கு சக்கரம் வாழி! வாழி!
ஆண்டாளும் ஆதிசேடனும் வாழி! வாழி!
திருப்புயங்கள் ஓரிரண்டும் வாழி! வாழி!
செவ்விழி களிரண்டும் வாழி! வாழி!
அருமறைகள் ஆகமங்கள் வாழி! வாழி!
அந்தணரும் ஆவினமும் வாழி! வாழி!

மங்களம்

இலக்குமி நாராயணருக்கு ஜெயமங்களம்
இணுவிலுறை வெங்கடேசருக்கு ஜெயமங்களம்
உலக மேழுங் காப்பவற்கு ஜெயமங்களம்
கருட வாகனற்கு ஜெயமங்களம்
ஆலிலையில் துயின்றவற்கு ஜெயமங்களம்
ஆண்டாளுக்கும் அனுமனுக்கும் ஜெயமங்களம்
ஆனை முகத்தவற்கு ஜெயமங்களம் இணுவிற்பதி
அடியார்கள் அனைவருக்கும் ஜெயமங்களம்
ஜெயமங்களம் - ஜெயமங்களம்
சுபமங்களம் - சுபமங்களம்

## 2013இல்

# ஸ்ரீ முத்துக்குமார சுவாமிகள்

# திருவூஞ்சல்



## காப்பு

செழுங்கலைகள் ஓங்குபதி திருவூராம்
இணுவையிலே கோயில் கொண்ட கோவே!
எழும்பிணியால் ஏங்குகின்ற அடியவர்தம்
மனத்துயரம் போக்கி அருள்பவனே!
பொழுதெல்லாம் கருணைமழை பொழியும்
கற்பக விநாயகனே பரராச சேகரனே!
வழுவிலா வரம்நல்கும் முத்துக்குமாரசாமி
திருவூஞ்சலாடப் பாடல் அருள்வாயே!

1. சித்தத்தைச் சிவன்பாலே வைத்தவடியார்கள்
அகலாத அன்பதுவே வடங்களாக
முத்திபெற வழிகாட்டும் முத்தாரம்
ஞானிகளின் உள்ளமே பீடமாக
கொத்துமலர்க் கோதையர்கள் இருமருங்கும்
இருப்பச் சக்திபெறு முத்துக்குமரா!
அத்திமுகனுக்கு இளையவனே ஆடீரூஞ்சல்
இணுவைநகர் அருள்பொலிய ஆடீரூஞ்சல்

2. பக்தர்களும் முத்தர்களும் வாழிணுவைப்
பதியமர்ந்த பரமகுருவே! பரம்பொருளே!
சித்திபெற வழிகாட்டிச் சிறந்தநல்
ஞானமெனும் வேலேந்தும் ஞானவேலா
அத்திமுகன் தம்பியே அருள்வேலா!
சிறுபிணிகள் அணுகாமல் காக்கும் கந்தா!
பத்தியொடு பரவுவார்க் கருள் சுரந்து
முத்திதரும் முத்துக்குமரா ஆடீரூஞ்சல்!

3. நாரணனும் நாரதரும் துதிகள் பாட
நான்முகனும் தேவர்களும் வணங்கிநிற்க
பூரணமாய்ப் பூதகணங்கள் பொலிந்து ஆட
நாமகளும் பூமகளும் வடந்தொட்டாட்ட
காரணமாய் நின்றஜோதிக் கணபதியும்
வாழ்த்துக்கூற எழில் முத்துக்குமரனாய்
ஓரணங்காய் எழிலுருவாய் அமர்ந்திருந்து
அடியார்தம் குறைதீர்க்க ஆடீரூஞ்சல்

4. தேன்சிந்தும் மாமலர்கள் நிறைந்த சோலை
தூங்காதே மலர்பறிக்கும் பக்தர்கூட்டம்
வான்சிந்தும் மாமழைக்கோ குறைவேயில்லை
வளமான வாழைகளும் குலைகள் போடும்
வான்முட்டும் தென்னைமரத் தோப்பின் கீழே
மாமரங்கள் பலாமரங்கள் கனிகள் சிந்தும்
நீங்காத செல்வமலி இணுவையூரில்
கோயில் கொண்ட முத்துக்குமரா! ஆடீரூஞ்சல்

5. பக்தியொடு பூசனைகள் புரிந்துவாழும்
அந்தணர்கள் அடியவர்கள் சூழவாழும்
உத்தமரின் மந்திரங்கள் மணியோசை
ஒலிக்கநாளும் சிவபூசை சிறந்த கோயில்
தித்திக்க அருள்பொலியும் பரராசசேகரன்
அருகிருக்கப் பேறுபெற்ற முருகா!
முத்தமிழின் வித்தகனே முத்துக்குமரா
முதுமைதா னிலாதவனே! ஆடீரூஞ்சல்

6. வேதவொலி மந்திரங்கள் பூசனைகள் ஏற்று
அடியவர்தம் அவதியுறு வேதனைகள் கேட்டு
தீதகலத் திருவிழாப் பொலிவு கண்டு செல்வமலி
இணுவைநகர் கோயில் கொண்டாயுன்
சீதமதிக் குடைநிழற்கீழ் நம்பிவாழும்
அடியவர்க்கருள் சுரக்க ஆடீரூஞ்சல்
ஆதிஅயன் தேவர்களும் அருள் பெற்றுய்ய
முத்துக்குமரா! மகிழ்ந்து ஆடீரூஞ்சல்

7. பிரணவத்தின் பொருளுரைத்தாய் சிவகுருநாதா!
பெருங்கருணைக் கந்தா கலியுகவரதா!
வருமகந்தை தீர அயனாரின் தலையிற்குட்டிப்
பெருஞ்சிறையில் இட்டவனே முருகா
கருநாவற் பழம்கேட்ட ஒளவைக்கருள்
சுரந்து சுட்டபழம் போட்டவனே யன்று
திருவாழுமிணுவை நகருறையும் முத்துக்குமரா!
அடியார்தம் அகந்தைகெட ஆடீரூஞ்சல்

8. காளையர்கள் காவடிகள் சுமந்தாடிவர
கன்னியர்கள் கற்பூரச்சசட்டிகளை ஆர்வமுடனேந்திவர
வாழைக்குலை தோரணங்கள் வாயிலெல்லாம்
அலங்கரிக்க வானவர்கள் வந்துதுதிபாட
ஏழைக்கருள்பவனே ஏந்தலேயென்று பக்தர்குழாம்
பண்ணமைந்த பாடல்கள் பாடிவரக் களிக்கும்
காளைக்குமரேசனே! கார்மயில் வாகனனே! முத்துக்குமாரா!
அகிலமெலாமுய்ய அகமகிழ்ந்து ஆடீரூஞ்சல்

9. முத்தாரமின்னும் மணிகளாட மூவுலகுமாட
கொந்தார் குழலிகள் தொட்டாட கோனாட
வித்தாரமார்பில் உத்தரியமாட இரத்தினக்கிரீடமாட
ஞானவேலாட ஞானியர்கள் தாமாட
பக்தியொடு சிவனாட உமையாட
பக்தருடன் "பாவையர்கள்" சேர்ந்தே ஆட
அத்தி முகத்தவனாட அவனியெல்லாம் சேர்ந்தாட
சித்திதரும் முத்துக்குமரா! ஆடீரூஞ்சல்

10. நினைத்தவரம் தந்துவிடும் பரராச சேகரன்
அருகிருக்க அகமகிழ்ந்து ஆடீரூஞ்சல்
அனைத்து லகும் அருள்பொலிய ஆடீரூஞ்சல்
குறமகளும் குஞ்சரியும்ஆட ஆடீரூஞ்சல்
மனக்குகையில் இருளகற்ற ஆடீரூஞ்சல்
அறம்வளர அன்புகொண்டு ஆடீரூஞ்சல்
வினைதீர்க்கும் வேலவனாய் ஆடீரூஞ்சல்
முத்திதரும் முத்துக்குமாரனே! ஆடீரூஞ்சல்

## வாழி

திருவிழிகள் பன்னிரண்டும் வாழி! வாழி!
ஈராறு தோள்களும் வாழி! வாழி!
பெரிய திருமறைகள் வாழி அரிய திருமறைகள்
வேத சிவாகமச் சைவநெறி வாழி!
பேரிணுவைப் பதிவாழி! பெரும் பக்தர் வாழி!
ஆனினம்வாழி! அந்தணர் வாழி! மங்கையர் தாம் வாழி!
பெரிய திருவடிகள் வாழி! ஞான வடிவேல் வாழி! வாழி! வாழி!
ஞாலமெலாம் வாழி! முத்துக்குமாரனே! வாழி! வாழி!

## ஜெயமங்களம்

முந்துதமிழ் உரைத்தவற்கு ஜெயமங்களம்
முழுதுலகும் ஆண்டவற்கு ஜெயமங்களம்
தொந்தி வயிறனுக்கு ஜெயமங்களம்
கந்த குமரேசனுக்கு ஜெயமங்களம்
செந்தூரில் இருப்பதற்கு ஜெயமங்களம்
செம்பவளக் குன்றனுக்கு ஜெயமங்களம்
தங்கமயில் வாகனற்கு ஜெயமங்களம
தென்னிணுவை முத்துக்குமாரனுக்கு ஜெயமங்களம்

"மங்களம் ஜெயமங்களம் சுபமங்களம்"

# இணுவில் அம்பலம் கந்தையாச் சாமியார்

பெறுதற்கரிய மனிதப் பிறவியைப் பெற்ற நாம் தவிர்ப்பன தவிர்த்து, ஏற்பவை ஏற்று நானிலம் போற்ற வாழ்வதே சிறப்பாகும். நன்னெறியில் வாழும் மாந்தர் தம்மை அறியாமலே நல்லன செய்து நலமுடன் வாழ்கின்றனர். அதனால் இறை உணர்வும் இரக்கச் சிந்தனையும் அவர்களுக்கு இயல்பாக அமைந்து விடுகின்றன. அத்தகையோரைச் சுட்டிக் காட்ட வந்த திருவள்ளுவர்

"தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தால் காணப் படும்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

மனிதர் உயிர் வாழும் காலத்தில் சம்பாதிக்கின்ற புகழும், பணியுமே அவர்கள் உயிர் நீத்த பின்னர் அவர்களை நினைவுகூரச் செய்கின்றன என்பது மேற்போந்த குறள்பாவின் கருத்தாகும்.

இந்த வகையில் நோக்கும் பொழுது எமது காலத்தில் வாழ்ந்த இணுவில் அம்பலம் கந்தையாச் சாமியாரின் வாழ்வு நினைத்துப் பார்க்கச் செய்கின்றது.

இவர் எப்பொழுதும் சிவசின்னங்களுடன் காட்சியளிப்பார். நெற்றியிலே திருநீற்றுப் பூச்சு, அதற்கு மேல் சந்தனப் பொட்டு, கழுத்தில் ஒட்டக்கட்டிய உருத்திராக்கம், அத்துடன் கழுத்திலிருந்து தொப்புள் வரை நீளத் தொங்கும் உருத்திராக்க மாலை, கையில் ஒரு நீண்ட பொல்லு, காலில் குமிழ், மிதியடி, இவற்றுடன் இடுப்பிலே நான்கு முழ வேட்டி, மார்பை மறைத்து வெள்ளைச் சால்வை அணிந்து கொண்டு வாய் இறை நாமம் உச்சரித்தவாறு ஆலய வழிபாட்டுக்குச் செல்வது அவரது நாளாந்தப்பழக்கம். "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்பதைத் தமது செயல் மூலம் வெளிப்படுத்தியவர். இணுவில் அம்பலம் கந்தையாச் சாமியார்.

இவர் இணுவில் மேற்கைச் சேர்ந்த "கொட்டையடி" என்ற குறிச்சியை வாழ்விடமாகக் கொண்ட அம்பலம் - பார்வதி தம்பதியரின் தவப்புதல்வனாக 1875 ஆம் ஆண்டு அவதரித்தார். அவரது தந்தையார் மிகுந்த சைவ ஆசார சீலர். காலையில் நீராடிச் சிவபூசை செய்த பின்பே உண்ணும் பழக்கம் உடையவர்.

விவசாயத்தைத் தொழிலாகக் கொண்ட அம்பலம் உயிர்களிடத்து இரக்கமும், அன்பும் உள்ளவர். தோட்ட வெளியில் அநாதரவாய்த் திரியும் கால்நடைகளுக்கு மத்தியான வேளைகளில் அவற்றின் தாகம் தீரத் தண்ணீர் அள்ளி வாளியை நிரப்பி வைப்பார். அதன் பின்னரே வீட்டுக்குத் திரும்புவது அவரது இயல்பு.

இத்தகைய அம்பலம் தம்பதியருக்கு எல்லா வகையான மனநிறைவும் இருந்த போதிலும், குழந்தைச் செல்வம் இல்லாதது பெரும் குறையாகும். அதனால் திருச்செந்தூர் முருகனை வேண்டி விரதமிருந்து பெற்ற பிள்ளைக்கு முருகனின் நினைவாகக் கந்தையா என்று பெயர் வைத்தார். கந்தையாவுக்கு ஐந்து வயது நிரம்பியதும் தலைமுடி இறக்குதல், காது குத்துதல் முதலிய நேர்த்திகளைச் செய்தற் பொருட்டு மகனைத் தூக்கிக் கொண்டு மனைவியுடன் கடற்கப்பல் மூலம் சிதம்பரத்துக்கு அம்பலம் சென்றார்.

அங்கு சென்றதும் தில்லைக் கூத்தனைக் கண்குளிரக் கண்டார். தாம் எடுத்துக் கொண்ட நேர்த்தி கைகூடியதை எண்ணி மகிழ்வுற்று மன நிறைவையும் எய்தினார்.

கூத்தப்பெருமானைக் கண்டு களித்ததோடு தன்னை மறந்து நிலத்தில் வீழ்ந்து அட்டாங்க நமஸ்காரம் செய்தார். பக்தி மிகுதியால் நீண்ட நேரம் அசைவற்றுக் கிடந்தார். பக்தி மிகுதியால் நீண்ட நேரமாகியும் எழுந்திருக்காததை அவதானித்த மனைவி அவரின் புறமுதுகில் மெதுவாகக் கையை வைத்தார். உடம்பு

குளிர்ந்து போய் இருந்தது. பதற்றமுற்றுக் கணவனை எழுந்திருக்கு மாறு பொதுவாகக் கேட்டார். அவர் பேச்சற்றுப் பேசாது கிடந்தார். அயலில் நின்றோரை அன்புடன் அழைத்து, கணவனின் உடலை அவ்விடத்திலிருந்து நீக்கி, அதற்குச் செய்ய வேண்டிய இறுதிக் கடன்களுக்கும் ஆவன செய்வித்தார்.

தனித்து விடப்பட்ட தாயும், மகனும் கூத்தப் பெருமானின் திருவடியே தஞ்சம் என்று நம்பி தில்லைப்பதியில் மூன்று மாதம் வரை தங்கி நின்று வாழ்ந்தனர். அதன் பின்னர் ஏதோ வகையில் ஈழம் திரும்பி நலமுடன் யாழ்ப்பாணம் வந்தனர்.

இவர்கள் யாழ்ப்பாணம் வந்த பின்னே சிதம்பரத்தில் நிகழ்ந்த செய்தியும் ஆறமுடியாத மனக்கவலையும் தெரிய வந்தன.

தந்தையை இழந்த தவப்பிள்ளையான கந்தையா தாயின் அரவணைப்பில் வளர்ந்து நாவலர் பெருமானின் வழிவந்தோரிடம் சமயக் கல்வியைக் கற்றார். உதவியற்ற தாயும் மகனும் தமது ஜீவனோபாயத்திற்குத் தந்தையார் செய்த விவசாயத்தைச் செய்து முட்டின்றி வாழ்ந்தனர். இயல்பாகச் சிவசிந்தனை நிரம்பிய கந்தையா சைவாசாரமும் இறைவழிபாடும் நிரம்பியவர்.

தந்தை இல்லாத இந்தப் பிள்ளையின் நற்பண்பைக் கண்டு பலரும் பாராட்டினர். பலரின் அன்புக்கு உரித்தான கந்தையாவுக்கு திருமணப் பருவம் வந்ததும் சின்னாச்சி என்பவரை இவருக்கு வாழ்க்கைத் துணைவியாக உறவினர் திருமணம் செய்து வைத்தனர். இதன் பேறாக சின்னத்துரை, செல்லத்துரை, பொன்னுத்துரை, துரையப்பா ஆகிய நான்கு ஆண்களையும், அன்னப்பிள்ளை என்ற ஓர் ஆசை மகளையும் பிள்ளைச் செல்வங் களாகப் பெற்றார். இணுவில் தெற்கில் தனது இருப்பிடத்தை அமைத்துக் கொண்டார். மணப்பருவம் ஆனதும் அவர்களுக்கு ஏற்ற வாழ்க்கைத் துணைகளைத் தேடி வைத்தார். குடும்பச் செழிப்பில் மகிழ்ந்த கந்தையா "எத்தொழிலைச் செய்தாலும் ஏதவத்தைப்

பட்டாலும் முத்தர் மனமிருக்கும் மோனத்தே" என்பதற்கமையத் தனது இறுதிக் காலம் வரை கடவுள் பணியில் கட்டுண்டவராகவே வாழ்க்கையை நடத்தினார்.

வீட்டில் இருக்கும் வேளையிலும் தனது சிந்தனை மாறாதிருக்க வேண்டும் என்பதற்காக வீட்டுக்கு அருகே ஒரு பூசைக் கொட்டில் அமைத்து, அதில் தனது பூசை வழிபாடுகளை வைத்துக் கொண்டார்.

ஓய்வு நேரங்களில் பெரியபுராணம், கந்தபுராணம், திரு விளையாடற் புராணம் ஆகியவற்றை வாசித்து மனநிறைவு கொள்வார்.

அதிகாலையில் காலைக் கடன்களை முடித்த பின்னர் ஆலயத்திற்குச் செல்வார். இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் கோயிலில் கந்தசுவாமி கோயிலுக்குச் சென்று அலகிடுதல், மெழுகுதல், பூசைக்கு வேண்டிய பூக்களைக் கொய்தல், மணி யடித்தல், தூப தீபமேற்றல், பஞ்ச தோத்திரம் பாடுதல் அத்துடன் புராணபடனத்திலும் பங்கு பற்றிச் சிறப்பித்தார்.

### எதிர்பாராது ஏற்பட்ட வயிற்றுக் குத்தும் அதைத் தீர்த்துக் கொண்டமையும்

இறைவனின் ஒரு சோதனைக்கு ஆளான கந்தையா, ஆற் றொணாத வயிற்றுக்குத்து நோய்க்கு இலக்கானார். வருத்தம் தாங்க இயலாது தவித்த இவர் நல்லூர்க் கந்தனிடம் சென்றார். இவரை வருத்திய வயிற்றுநோய் தீராது விட்டால் அவ்விடத்திலேயே இறந்துபோவதாக உறுதியும் எடுத்துக்கொண்டார். ஒரு நாள் இரவு அந்தணர் ஒருவர் கனவிலே தோன்றி "கந்தையா வாயைத்திற இந்த மருந்தை விழுங்கு என்று சொல்லிக் கையை நீட்டி தான் கொண்டு வந்த திருநீற்றை அவரின் வாயினுள் போட்டார். கந்தையா கண்ணை விழித்தபோது ஒருவரையும் காணவில்லை. மறுகணத்திலிருந்து

அவரை வருத்திய குத்துநோய் நீங்கிவிட்டது என்று மிகப் பய பக்தியுடன் கூறி நல்லைக்கந்தனின் அற்புதத்தை வியப்பார்.

இந்நிகழ்வின் பின் கந்தையா அதிதீவிர முருக பக்தனாய் மாறிவிட்டார். அத்துடன் முருகனை நம்பினோர் கைவிடப்பட மாட்டார்கள் என்று நல்லுரையும் சொல்லுவார்.

தனது நோயைத் தீர்த்த கந்தனுக்கு நன்றிக்கடனாக இணுவில் கந்தசாமி கோயில் வடக்கில் எழுந்தருளிய சாந்தியடி வயிரவரின் முன்னாக இருக்கும் கிணற்றுக்குக் கிழக்கில் உள்ள காணித்துண்டில் ஒரு சிறு பூந்தோட்டம் அமைக்க ஆவன செய்யத் துணிந்தார்.

முதலில் புல் மேய்ந்து திரியும் கால்நடைகள் பூந்தோட் டத்தை அழித்துவிடாமல் இருப்பதற்கு அயலிலுள்ள இளைஞரின் உதவியுடன் அதனைச் சூழத் தடி நட்டு, வேலி அடைக்க ஒழுங்கு செய்தார். பின்பு தேவையான பூக்கன்றுகளை நட்டு, அவை செழித்து வளர்வதற்கு ஓலைப் பட்டை கட்டி நீர் இறைக்கவும் ஆவன செய்ய, பலரும் உதவினர். குறுகிய காலத்தில் கந்தக் கடவுளுக்குத் தேவையான பூ வகைகளை இங்கிருந்தே கொய்துகொள்ள வாய்ப் பாயிற்று.

**கந்தையாச் சாமியாரின் காலைத் தொண்டுகள்**

கோயில் திருப்பணியை நோக்கமாகக் கொண்ட கந்தையாச் சாமியார் அதிகாலையில் எழுந்து காலைக்கடன்களை முடித்த பின்னர் ஒரு கையில் ஊன்றுகோலான நீண்ட தடியும், மறு கையில் இலாம்பு விளக்கும், கொண்டு காலில் குமிழ் மிதியடியுடன் கோயிலுக்குச் செல்வார். இவரின் மிதியடிச் சத்தம் கேட்டதும் தோட்ட இறைப்புக்கு எழுந்து விடுவதாக அயலிலுள்ள விவசாயிகள் சொல்வதுண்டு.

இவர் கோயிலுக்குச் சென்று சரியாக மூன்று மணியானதும் ஆலய மணியை அடித்துவிட்டு, சாந்தியடியானின் தீர்த்தக் கிணற்றில் நீராடுவார். பின்பு பூந்தோட்டத்தில் பாதுகாப்பாக வைத்திருக்கும் பூக்கூடையையும் கொக்கியையும் எடுத்து மலர்ந் துள்ள பூக்களை ஒவ்வொன்றாகக் கொய்து கூடையை நிரப்புவார். பின்பு உட்கோயிலைப் பெருக்கி, நீர்தெளித்துச் சுத்தம் செய்வார். அவற்றைத் தொடர்ந்து சட்ட விளக்குகளுக்கு எண்ணெய் விடுவ துடன் தூப, தீபங்கள் ஏற்றுவதற்கும் தயார் செய்வார். பூசை நேரம் வந்ததும் மலர்கள் பறித்து வைத்திருந்த பூக் கூடையைப் பூசகரிடம் எடுத்துக் கொடுப்பார்.

காலைப் பூசை நிறைவுற்றதும் இவர் பண்ணோடு திருமுறை களை ஓதுவார். ஈற்றில் சண்டேசுரர் பூசை முடிந்த பின்னர் பூசகர் வெளியே வந்து திருநீறு தீர்த்தம் ஆகியவற்றை அங்கு நிற்கும் அடியார்களுக்குக் கொடுப்பார். அவற்றைப் பெற்றவர்கள் கோயில் வாயிலில் வீழ்ந்து வணங்கிவிட்டுத் தமது வீடுகளுக்குச் செல்வர். அவர்களைத் தொடர்ந்து கந்தையாச் சாமியாரும் வீடு செல்வார்.

கந்தையா அப்பா காலைப் பொழுதைத் தூய்மையாகவும் கண்ணியமாகவும் எல்லா நாளும் கழித்து வாழ்ந்ததால் மாசற்ற நெஞ்சினராய் மக்கள் மனத்தில் நல்லதோர் இடத்தைப் பிடித்துக் கொண்டார். அவரின் ஒருவரின் பக்கத்தில் நின்றால் ஒரு தெய்வீக வாசனை வீசும். அதனை அறியாதோர் எங்கிருந்து இந்தச் சந்தண வாசனை வீசுகிறது என்று கேட்பார்கள்.

இவ்வாறான நறுமணம் இணுவில் பரமானந்தவல்லி அம்பாள் கோயிலுக்கு அருகில் வாழ்ந்த புராணிகர் சேதுலிங்கச் சட்டம்பியாருக்கும் அருகில் நின்றால் அவரின் மேனியிலிருந்து சந்தண வாசனை வீசியதை அவரது காலத்தில் வாழ்ந்தவர்கள் அறிவர்.

சிதம்பர நடராசப் பெருமான் மீது அளவற்ற பக்தி கொண்ட கந்தையாச் சாமியார் அடிக்கடி சிதம்பரத்துக்குச் சென்று வருவார்.


அங்கிருந்து வரும்போது விபூதி, உருத்திராக்க மாலைகள் பஜனைக்கு ஏற்ற தாளங்களும் கொண்டு வருவார். பஜனையில் பங்குபற்றிப் படிக்கின்ற இளைஞர்களை ஊக்குவிப்பதற்கு தாம் சிதம்பரத்திலிருந்து கொண்டு வந்த தாளம் ஒன்றைக் கொடுத்து இறைநாமம் சொல்லுமாறு தூண்டுவார். இவ்வாறு இவரால் வழிகாட்டப்பட்ட ச.செல்வநாயகம் ஆசிரியர், இராசரத்தினம் ஆசிரியர், செல்லப்பா மணியம் ஆகியோரைக் குறிப்பிடலாம். ஊரிலுள்ள உடல் நலம் குன்றியவர்கள் இவரிடம் வந்து திருநீறு சாத்துவித்தால் அவர்களைப் பிடித்த நோய் தீர்ந்துவிடும். அதனால் குழந்தைகள் முதல் முதியோர் வரை அவரிடம் வந்து திருநீறு போடுவித்துக் குணமடைந்தனர்.

தில்லைக் கூத்தனின் திருவருள் பெற்ற இவர் மார்கழித் திருவாதிரை நாளன்று இணுவில் கந்தசாமி கோயில் நடராசப் பெருமான் திருவீதி வரும்போது பெருமானின் முன்னே தன்னை மறந்து இங்கும் அங்கும் அசைந்து ஆடும் நடனம் மெய்யடியார் களின் மனத்தை விட்டு நீங்காது.

பெரியவர் சிறியவர் என்று பாராது எல்லோருடனும் மனம் விட்டுப் பழகிய இப்பெரியார் எண்பது வயது வரை இம்மண்ணில் வாழ்ந்தார். 1955ஆம் ஆண்டு சித்திரை மாதம் இறைநிலை அடைந்தார். 80 ஆண்டுகள் வரை வாழ்ந்து இணுவைப்பதிக்கு நற்பெயரீட்டியுள்ளார். அவர் தாம் வாழும் காலத்தில் மிகவும் கவனமாகப் பேணிப் பாதுகாத்த பெட்டகத்தைத் திறந்து பார்த்த போது அதிலே சிதம்பரத்திலிருந்து கொண்டுவரப்பட்ட விபூதி, சந்தணம் ஆகிய தெய்வீகப் பிரசாதங்களே காணப்பட்டமை அவரின் இறை சிந்தனைக்குச் சான்றாகும். அவர் வாழ்ந்த காலத் தில் நாமும் பிறந்து, அவருடன் பழகும் வாய்ப்புக் கிடைத்ததை எண்ணி மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

சோ.பரமசாமி B.Sc

**(இக்கட்டுரை 2012 மாசி மாத சந்நிதியான் இதழில் வெளிவந்தது)**



இணுவில் கந்தசுவாமி கோயிலில் உலகப் பெருமஞ்சம் அமைத்த

இணுவில் பெரிய சந்நியாசியார்

1860 - 1917 (சித்திரைத் திருவோணம்)



தையிட்டி அரசடி சித்தி விநாயகர் ஆலயம்